வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

பக்கங்கள் : 16

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

22.02.2021 திங்கட்கிழமை




# குருந்தூர்மலை நாகர் கால சிவன் கோவில்: அங்கு பௌத்த படிமம் எதுவுமேயில்லை!



## அறுதியிட்டு கூறுகிறார் மூத்த வரலாற்று பேராசிரியர் பத்மநாதன்

யாழ்ப்பாணம், பெப். 22

முல்லைத்தீவு குருந்தூர்மலை அகழ்வாய்வில் மீட்கப்பட்ட சின்னம் 2ஆயிரத்து 300 வருடங்கள் பழமையானது. இதனை அந்தச் சின்னத்திலுள்ள வரிவடிவ எழுத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. அங்கு மீட்கப்பட்டவெள்ளைக் கல் படிமம் பௌத்தத்துக்கு உரியது அல்ல. எனினும் அதனை, சிவலிங்கம் என்று கொள்வது பொருந்தும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் யாழ். பல்கலைக்கழகத்தின் வேந்தரும் வரலாற்றுத்துறை மூத்த பேராசிரியருமான சி. பத்மநாதன்.

இது தொடர்பில் அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:

குருந்தூர்மலையில் மீட்கப்பட்ட சின்னங்கள் இப்போது பேசப்படுவதுபோன்று பல்லவர் காலத்துக்கு உரியவை அல்ல. பல்லவர் காலத்துக்கும் இந்தச் சின்னங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இவை அந்தக் காலத்துக்கும் மிகவும் முற்பட்டது. 02



## 10 தமிழ் தேசிய கட்சிகள் இணைந்து உதயமாகிறது

# தமிழ் தேசிய பேரவை

### சுரேஷ், சிவஞானம் கூட்டாக அறிவிப்பு




யாழ்ப்பாணம், பெப். 22

தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைத்து ‘தமிழ் தேசிய பேரவை” என்ற அமைப்பை உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளர் சுரேஷ் பிறேமசந்திரன் தெரிவித்தார். இதன்போது இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானமும் உடனிருந்தார். 02

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி பேரவையுடன் இணையாது!

### செயலாளர் கஜேந்திரன் திட்டவட்டம்



யாழ்ப்பாணம், பெப். 22

தமிழ் தேசிய மக்கள் முன்னணி புதிதாக உருவாகும் தமிழ் தேசிய பேரவையுடன் ஒருபோதும் இணையாது என்று திட்டவட்டமாக ‘ஈழநாடு’ வுக்கு தெரிவித்தார் அந்தக் கட்சியின் செ. கஜேந்திரன்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் நேற்று யாழ்ப்பாணத்தில் ஒன்று 02

## மனித உரிமை கூட்டத் தொடர் இன்று ஜெனிவாவில் ஆரம்பம்!

கொழும்பு, பெப். 22

ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 46ஆவது கூட்டத் தொடர் பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி மார்ச் 23 ஆம் திகதி வரை சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகரில் ஆரம்பமாகின்றது.

கொரோனா பரவல் அச்சம் காரணமாக இந்தக்கூட்டம் காணொளி 02



## சித்தார்த்தன் எம்.பியிடமும் பொலிஸார் நேற்று விசாரணை

கொழும்பு, பெப். 22

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி பேரணியில் பங்கேற்றமை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் புளொட் கட்சியின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தனிடம் பொலிஸார் நேற்று விசாரணை நடத்தினர்.

கொழும்பில் உள்ள புளொட் கட்சியின் அலுவலகத்திற்கு சென்ற கிளிநொச்சி, பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொலிஸார் தனித்தனியாக அவரை விசா 02



## மைத்திரி, மங்களவுடன் பஸில் இரகசியப் பேச்சு!

கொழும்பு, பெப். 22

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மங்கள சமரவீர ஆகியோரை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தனித்தனியே இரகசியமாக சந்தித்துப் பேசியுள்ளார் என்று தெரிய வருகின்றது. 02

## தொண்டைமானாறு கடலில் நீராட சென்ற சிறுவன் மூழ்கிப் பலி!

வடமராட்சி, பெப். 22

தொண்டைமானாறு சிறு கடற்பரப்பில் ஊரவர்களுடன் நீராடச் சென்ற சிறுவன் ஒருவர் மூழ்கி பலியானார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற் 02

## பேரா. துரைராஜா நினைவுப் பதக்கம் இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழாவில் வழங்கப்படும் பேராசிரியர் அ. துரைராஜா ஞாபகார்த்த தங்கப் பதக்கப் 02

## வடக்கில் நேற்று 6 தொற்றாளர்கள்

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ்ப்பாணம் சிறைச்சாலை கைதி ஒருவர், வடமராட்சியை சேர்ந்த ஆசிரியை ஒருவர் உள்ளிட்ட ஆறு பேருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது என்று வடக்கு 02

## இரு மீனவர்கள் கடலில் மாயம்!

யாழ்ப்பாணம், பெப். 22

குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவு நோக்கி படகில் சென்ற இரு மீனவர்களை காணவில்லை என்று தெரிய வருகின்றது. இதேவேளை அவர்கள் பயணித்தனர் என்று கூறப்படும் படகு பாதணிகள், ஐஸ்கட்டிகள் உள்ளிட்ட பொருட்களுடன் கரை ஒதுங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. 02

## குருந்தூர்மலை...

செங்கட்டிகளால் அமைக்கப்பட்ட ஒரு சிறிய கட்டடத்தின் இடிபாடுகள் தெளிவாகத் தெரிகின்றன. பார்ப்பவர்கள் எவருக்கும் இது புலனாகும். அந்தக் கட்டடத்தினுள் சற்று முன்புறமாக ஒரு வெள்ளைக் கல்லில் அமைந்த ஓர் உருவம் தெரிகிறது. அதில் பௌத்த படிமம் போல எதுவும் காணப்படவில்லை. ஆதி காலத்து தொல்பொருள் சின்னங்களில் அநேக மானவை நாகர்களோடு தொடர்புடையவையாகும்.

நாகர்கள் வழிபட்ட சிவலிங்க வடிவங்கள் பனங்காமம் தொடக்கம் ஓமந்தை போன்ற இடங்களிலே பெருமளவிலே காணப்படுகின்றன. இங்கே காணப்படுவது சிவலிங்க வடிவம் என்று கொள்வது சாலவும் பொருந்தும். இதைத்தான் வேறு ஆய்வாளர்களும் சொல்லியுள்ளார்கள். அது சிறிய கட்டடத்தில் அமைந்திருப்பது இந்தக் கருத்தை வலியுறுத்துகிறது.

அதில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. நாகர்களின் கடவுள் பெயர் அதிலே காணப்படுகின்றது. அந்த லிங்கத்திலே 'மணி நாகன்' என்ற பெயர் தெளிவாகத் தெரிகின்றது. அது மட்டுமன்றி 'வேள் நாகன்' என்ற பெயரும் அதிலே காணப்படுகின்றது. வழமையாக கடவுள் சின்னங்களிலும் கடவுள் பெயரை எழுதுவதோடு அதை நிறுவியவர்கள் அல்லது நன்கொடை செய்பவர்களின் பெயரை எழுதுவது வழமை நாகர்களின் வழமைப்படி வேள் நாகன் என்றுதான் அது எழுதப்பட்டிருக்கிறது.

வழிபாட்டு சின்னங்கள் எல்லாவற்றிலும் அவர்கள், கடவுள் பெயர்களை தமிழ்ப் பிராமி வடிவங்களிலே பொறித்தார்கள். சிவலிங்கம், புத்தர் படிமம், நந்தி, மயூரம், பூசகம் முதலிய எல்லாவற்றிலும் இந்தக் கடவுள் பெயர் காணப்படும். சின்னத்தின் அடிப்படையில்தான் அது எந்த வழிபாட்டு மரபுக்கு உரியது என்பது நிர்ணயிக்கப்படும்.

இங்கு காணப்படுவது சிவலிங்கம். அதிலே காணப்படுகின்ற எழுத்துக்களைக் கொண்டு பார்க்குமிடத்து இது கி.மு. 3 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாகக் கொள்ளத்தக்கது. சில சமயங்களில் இலங்கையில் வட்டெழுத்து மரபு பரவியிருக்காததனாலே தமிழ்ப் பிராமி வரி வடிவங்கள் தொடர்ந்தும் சில நூற்றாண்டுகளாக நிலைபெற்றிருந்திருக்கின்றன.

ஆனால், இந்த வடிவத்தைப் பொறுத்த வரையில் இது சர்ச்சைக்குரிய வடிவமன்று. உறுதியாகச் சொல்லக்கூடியது என்னவென்றால் இது ஒரு பழங்காலத்து லிங்க உருவம். லிங்க உருவத்தின் ஆரம்பகால வடிவமைப்பை பிரதிபலிக்கின்ற வடிவம். நாகர்களின் கடவுள் பெயர் எழுதப்பட்டுள்ள வடிவம், சைவ சமய சின்னமாக அது அமைகின்றது.

## 10 தமிழ் தேசிய...

எதிர்வரும் 28ஆம் திகதி, தமிழ் தேசிய பேரவை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு எட்டக்கூடிய சாத்தியப்பாடான முடிவுகளை எடுப்பதற்காக செயல்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஒன்றிணைந்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தின் தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியப் பரப்பில் இணைந்து இயங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இலங்கை தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட் மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியை சேர்ந்த தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ்., தமிழ் தேசியக் கட்சி, ஈழத் தமிழர் சுயாட்சி கழகம் ஆகியவற்றுடன் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆகியன இணைந்து இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருக்கவில்லை.

இந்தக் கூட்டத்தின் முடிவில் சுரேஷ் பிறேமசந்திரனும், சீ.வீ.கே. சிவஞானமும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். இதன்போது சுரேஷ் பிறேமசந்திரன் மேலும் தெரிவிக்கையில்,

'தமிழ் தேசிய பரப்பில் இருக்கக்கூடிய 10 கட்சிகள் இன்றைய தினம் சந்தித்து இன்று இருக்கக்கூடிய அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும் ஐ. நா. மனித உரிமைப் பேரவையில் வந்திருந்த முதலாவது வரைவு தொடர்பாகவும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் பல விடயங்களை ஆராய்ந்து இருந்தோம்.

'எதிர்வரும் 26ஆம் திகதி வவுனியாவில் தமிழ் தேசிய பரப்பில் இருக்கக்கூடிய தமிழ் கட்சிகளும் அதேபோல கிறிஸ்தவ, இந்து பெரியார்களும் முக்கியமாக வட, கிழக்கில் இருக்கும் கிறிஸ்தவ ஆயர்கள், இந்து மத முதல்வர்கள், சிவில் அமைப்புக்கள் ஒன்றிணைந்து வவுனியாவில் பேசவுள்ளோம்.

இதன்போது, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் வரைவு தமிழ் மக்களுக்கு திருப்தியளிக்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொறுப்புக் கூறுதல் தீர்வு என்பது முக்கியமானது என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும் இது சர்வதேச அரசியலுக்கு அப்பால் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனித உரிமைகள், பாதிக்கப்பட்ட மக்களுக்கான தீர்வுகள் பொறுப்புக்கூறல் போன்றவற்றை சர்வதேச சமூகம் உண்மையான உணர்ந்து இந்த அடிப்படையில் தீர்மானம் ஐ.நா மனித உரிமை ஆணையத்தில் கொண்டு வரப்பட வேண்டும் என்பதுதான் எமது நோக்கமாகும் - என்றும் கூறினார். (ஐ)

## மைத்திரி...

இந்த இரு சந்திப்புக்களும் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளன.

மைத்திரிபால சிறிசேன- பஸில் ராஜபக்ஷ சந்திப்பு கொழும்பு மகாகம சேகர மாவத்தையில் உள்ள முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்றது.

இதன்போது, ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை குறித்து விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன், விமல் வீரவன்ஸவின் வீட்டில் இடம்பெற்ற சந்திப்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜெயசேகர பங்கேற்றிருந்தார். இது தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் பேசப்பட்டது என்று தெரிய வருகின்றது.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவை அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கொழும்பு ஷங்கரி -லா ஹோட்டலில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து வெளிவரவில்லை. எனினும், இந்த இரு சந்திப்புக்களும் கொழும்பு அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது என்று கூறப்படுகின்றது. (ஐ)

## தமிழ் தேசிய...

கூடி பேசின. ஆரம்பத்தில் நடைபெற்ற கூட்டங்களில் பங்கேற்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணி இந்தக் கூட்டத்திலும் பங்கேற்கவில்லை.

இந்நிலையில், இந்தப் பேரவையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி இணைந்து பயணிக்குமா? என்று அந்தக் கட்சியின் செயலாளர் செ. கஜேந்திரனிடம் 'ஈழநாடு' தொடர்பு கொண்டு கேட்டது. இதற்கு அவர் அளித்த பதில் வருமாறு:

"பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி போராட்டம் வெற்றிகரமாக மக்கள் எழுச்சி போராட்டமாக இடம்பெற்றது. இதற்கு தமிழ் அரசுக் கட்சியும் ஆதரவளித்தது. ஆனால், இந்தப் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் விதமாக பச்சைத் துரோகத்தனமாக அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பாராளுமன்றத்தில் உரையாற்றினார். இன்று தமிழ் மக்களுக்கு பலவீனமான ஐ. நா. வின் அறிக்கை ஒன்று வந்துள்ளது என்றால் அதை முழுமையாக தமிழ் அரசுக் கட்சிதான் ஏற்க வேண்டும்.

"சுமந்திரனின் இந்தத் துரோகத் தனத்தை நியாயப்படுத்தும் விதமாகவே எம்.கே.சிவாஜிலிங்கமும் கருத்துத் தெரிவித்துள்ளார். இந்தத் தரப்புக்கள் கூடித்தான் இந்தப் பேரவையை அமைக்கின்றன. இது முழுக்க முழுக்க கண்துடைப்பு நாடகம். மக்களை ஏமாற்றி தாங்கள் செய்யும் துரோகத்தை மறைக்கும் விதமாகவே நாங்கள் இதனைப் பார்க்கிறோம். தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரான சுமந்திரன் அந்தக் கூட்டில் இருந்து கொண்டு கோட்டாபயவை பாதுகாப்பதற்காக நாடகமாடுகிறார் என்பதே எமது கருத்து"- என்றார். (ஐ)

## மனித உரிமை...

மூலமாகவே இடம்பெறும்.

இதன்போது, இலங்கை தொடர்பில் விவாதமும், பிரேரணை தாக்கல் ஒன்றும் இடம்பெறவுள்ளன என்று கூறப்படுகின்றது.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நாளைமறுதினம் 23ஆம் திகதி மாலை அல்லது மறுநாள் காலை இந்தக் கூட்டத்தில் உரையாற்றுவார் என்று தெரிய வருகின்றது.

மேலும், முதல் மூன்று நாட்களும் பிரதான ஆரம்ப அமர்வுகள் இடம்பெறவுள்ளன. இந்த அமர்வுகளில் அமெரிக்கா, சீனா, இந்தியா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் உரையாற்றுவர். இதேபோன்று கனடா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, ஜேர்மனி, டென்மார்க், சுவீடன், ஜப்பான், பெல்ஜியம் ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் சீனா இலங்கைக்கு முழு ஆதரவை வெளிப்படுத்தும் என்று தெரிய வருகின்றது. இது விடயத்தில் அமைதி காத்து வரும் இந்தியாவும் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் என்று கருதப்படுகின்றது. (ஐ)

## வடக்கில் நேற்று...

மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். சிறைச்சாலையின் கைதிகள் 8 பேர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டபோது அவர்களிடம் சோதனை மாதிரிகள் பெறப்பட்டன. இவை நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது கைதி ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேபோன்று, புதுக்குடியிருப்பை சேர்ந்த இருவருக்கும், மல்லாவியை சேர்ந்த ஒருவருக்குமாக முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த மூவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்திலும் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. தொற்றுக்கு உள்ளானவர் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுபவர் என்று தெரிய வந்துள்ளது. (ஐ-எ)

## பேரா. துரைராஜா...

பரிசில்கள் இந்த ஆண்டுக்கானவை இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

துணைவேந்தரின் ஊடகப் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது. யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா ஞாபகார்த்தமாக பீட மட்டத்திலும், பல்கலைக்கழக மட்டத்திலும் கல்வி, விளையாட்டு, கலை கலாசாரம் உட்பட சகல துறைகளிலும் சிறந்த மாணவன் ஒருவருக்கு தங்கப் பதக்கம் வழங்கப்படுவது வழமையாகும்.

இம்முறை கலைப் பீட மட்டத்தில் சகல துறைகளிலும் சிறந்த மாணவனுக்கான பேராசிரியர் அ. துரைராஜா ஞாபகார்த்த தங்கப் பதக்கம், பல்கலைக் கழக மட்டத்தில் சகல துறைகளிலும் சிறந்த மாணவனுக்கான பேராசிரியர் அ. துரைராஜா ஞாபகார்த்த தங்கப் பதக்கம் ஆகிய விருதுகளுக்காக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் ஊடகத் துறையைச் சேர்ந்த மாணவன் ஒருவருக்கு சிறந்த மாணவனுக்கான பல்கலைக்கழக மட்ட விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதன்பின்னர், மெய்யியல் துறை மாணவர் ஒருவரிடம் இருந்து துணைவேந்தருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசேட மூதவைக் கூட்டம் கூட்டப்பட்டு மெய்யியல் துறை மாணவன் விருதுக்கு உரியவராக அறிவிக்கப்பட்டார்.

எனினும், மெய்யியல் துறை மாணவனுக்கு எதிராக மாணவர் தரப்பில் இருந்து மேன்முறையீடுகளும், ஆதாரங்களும், புதிய சாட்சியங்களும் கிடைத்தமையை தொடர்ந்து விருதுக்கு உரியவரை தெரிவு செய்வதற்குக் கால அவகாசம் போதாமையினால் விருது வழங்கல் இடைநிறுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிய விசாரணைகள் இடம்பெற்று பிறிதொரு விழாவில் இந்த விருது வழங்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-3)

## இரு மீனவர்களை...

மூன்று பிள்ளைகளின் தந்தையான ஞானசிங்கம் ரமேஸ் (வயது 41), ரஞ்சன் மயன் (வயது 19) ஆகியோரே இவ்வாறு காணாமல் போயுள்ளனர் என்று தெரிய வருகின்றது.

இவர்களை தேடும் பணியில் மீனவர்களும், கடற்படையினரும் நேற்றிரவு வரை ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை அவர்கள், இயற்கையான ஆபத்தை சந்தித்தார்களா அல்லது அத்துமீறும் இந்திய மீனவர்களால் அவர்களுக்கு ஆபத்து விளைவிக்கப்பட்டதா என் பது குறித்து சந்தேகம் நிலவுவதாக நெடுந் தீவு மீனவர்கள் தெரிவித்தனர். (ஐ-3)

## சித்தார்த்தன்...

ரித்து வாக்குமூலம் பெற்றனர்.

காலை 9.30 தொடக்கம் மதியம் ஒரு மணி வரை சுமார் மூன்றரை மணி நேரம் இந்த விசாரணை இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்திற்கு நீதிமன்றம் தடை விதித்தபோதும் அதை மீறி ஏன் கலந்து கொண்டீர்கள் என்று அவரிடம் பொலிஸார் வினா எழுப்பினர். இதற்குப் பதி லளித்த சித்தார்த்தன் எம்.பி. "இது ஒரு மக்கள் எழுச்சி போராட்டம். மக்களின் பிரதிநிதி என்ற அடிப்படையில் எனது மாவட்டத்தின் மக்களால் நடத்தப்படும் போராட்டத்தில் பங்கேற்க வேண்டிய பொறுப்பு எனக்கு உண்டு. அந்தப் பொறுப்பையே நான் நிறைவேற்றியுள்ளேன்", என்று கூறினார். (ஐ)

## தொண்டைமானாறு...

றுள்ளது. இதில், உடுப்பிட்டியை சேர்ந்த நல்லைநாதன் பிரகாஸ் (வயது 17) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நீராடிக் கொண்டிருந்தபோது நீரில் மூழ்கி சிறுவன் காணாமல் போயுள்ளான். இதையடுத்து ஊரவர்கள் அப்பகுதி மக்களுடன் இணைந்து தேடியுள்ளனர்.

சுமார் ஒன்றரை மணி நேரப் போராட்டத்தின் பின்னர் அவர் மீட்கப்பட்டார். உடனடியாக அவரை ஊறணி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், அவர் ஏற்கனவே இறந்து விட்டார் என்று அவரை பரிசோதித்த மருத்துவர் தெரிவித்தார். (ஐ-2-3)

## தமிழ் மக்களை...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கு தோள் கொடுத்த காரணத்தினாலும் புலம்பெயர் தமிழர்கள்கூட ஏமாற்றங்களையே தழுவியிருந்தனர்.

இத்தடவை ஜெனிவா மனித உரிமைப் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணையின் வரைபுகுறித்து பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ள நிலையில் தமிழரசுக் கட்சியின் மறைந்த தலைவரான தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமது பாராளுமன்ற நாட்களில் குறிப்பிட்ட ஒரு கருத்தே ஞாபகத்திற்கு வருவதோடு, இன்றைய அரசியல் சூழலிலும் அது பொருத்தமானதாகவே இருக்கின்றது.

அக்கருத்து வேறெதுவுமல்ல. 'இறைவன் தான் இனி தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டும்' என்பதேயாகும்.

சர்வதேச சமூகமும் வடக்கு-கிழக்கு தமிழர்கள் தொடர்பாக ஓர் உறுதியற்ற புதிய வரைபை தயாரித்துள்ள நிலையில், சர்வதேச சமூகத்தின் மத்தியில்கூட இலங்கைத் தமிழர் பிரச்னை தோல்வியைத் தழுவும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஈழநாடு
Eelanadu
22.02.2021 திங்கட்கிழமை
சார்வரி, மாசி 10

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# உண்மையில் யார் வெட்கித் தலைகுனிய வேண்டியவர்கள்?

இணைத் தலைமை நாடுகளால் இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பில் வெளியிடப்பட்ட உத்ததேச வரைவு தொடர்பில், தமிழர் தரப்புக்கள் தங்களின் அதிருப்திகளை வெளியிட்டிருக்கின்றன. தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான, சி.வி.விக்னேஸ்வரன், தனது அதிருப்தியை ஒரு குற்றச்சாட்டாக முன்வைத்திருக்கின்றார். அதாவது, இவ்வாறானதொரு வரைவை வெளியிட்டமைக்காக இணைத் தலைமை நாடுகள் வெட்கித் தலைகுனிய வேண்டுமென்று தெரிவித்திருக்கின்றார். இலங்கையின் இறுதி யுத்தம் நடைபெற்றபோது, பல்லாயிரக்கணக்கான மக்களை காப்பாற்றுவதில் ஐக்கிய நாடுகள் சபை தோல்வியடைந்திருப்பதாக ஏற்கனவே ஐ.நா.வின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு ஒப்புக்கொண்டிருக்கின்றது. அதற்கு தலைமை வகித்த ஐ.நாவின் உதவிச் செயலாளர் நாயகம் சார்ள்ஸ் பெட்ரே, அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையை அதிகமாக நம்பவேண்டாமென்று கூறியிருந்ததையும் நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தோம்.

இறுதி யுத்தத்தின்போது பல்லாயிரக்கணக்கான மக்களை காப்பாற்ற முடியாமல் போனமைக்காக வெட்கித் தலைகுனியாத ஐ.நாவின் உறுப்புநாடுகள், இனித்தானா வெட்கித் தலைகுனியப் போகின்றன? அதேவேளை, ஐ.நா.வின் செயற்பாடுகள் தோல்வியடைந்திருப்பது இதுதான் முதல்தடவையுமல்ல. ருவாண்டா இனப்படுகொலையின் போதும் ஐ.நா. அவ்வாறுதான் இருந்தது. அங்கு எட்டு லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர். மிகவும் அண்மையில், மியன்மாரின் ரொஹிங்கியா முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டபோதும் ஐ.நா., அறிக்கைகளை மட்டுமே வெளியிட்டுக் கொண்டிருந்தது. இவை தொடர்பில் விக்னேஸ்வரன் அறியாமல் இருக்கலாம். இணைத் தலைமை நாடுகளில் கனடாவும் ஒன்று. அதேபோன்று இங்கிலாந்தும் ஒன்று. இங்கிலாந்துதான் இம்முறை விடயங்களுக்கு தலைமை தாங்கிவருகின்றது. ஒப்பீட்டடிப்படையில் புலம்பெயர் தமிழர்கள் செல்வாக்குச் செலுத்தக்கூடிய நாடு என்றால் அதில் முதன்மையானது கனடாதான். ஏனெனில், கனடாவின் உள்ளக அரசியலில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய நிலையில் தமிழர்கள் பெருந்தொகையில் வாழ்கின்றனர். ஆனால், அவ்வாறானதொரு நாட்டின் வெளிவிவகார குழுவினர் மத்தியில் செல்வாக்குச் செலுத்த முடியாமல் போனமைக்காக யார் வெட்கப்பட வேண்டும்?

உத்தேச வரைவில் தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கான நிரந்தர அரசியல் தீர்வு தொடர்பில் எதுவுமில்லை. முன்னைய அரசாங்கம் இணையனுசரனை வழங்கியிருந்த பிரேரணையில், ஆகக் குறைந்தது 13ஆவது திருத்தச் சட்டமாவது குறிப்பிடப்பட்டிருந்தது. உண்மையில், வரவுள்ள பிரேரணையில் தமிழ் மக்களுக்கான கூடுதல் அதிகாரங்கள் தொடர்பில் குறிப்பிடப்படவேண்டும். ஆனால், உத்தேச வரைவை நோக்கினால் அரசியல் தீர்வு தொடர்பான கரிசனையே இணைத்தலைமை நாடுகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை. இதற்காக உண்மையில் வெட்கித் தலைகுனிய வேண்டியவர்கள் யார்? மூன்று கட்சிகள் இணைந்து இணைத்தலைமை நாடுகளுக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் ஏன் அரசியல் தீர்வு தொடர்பில் வலியுறுத்தவில்லை? அதில் விக்னேஸ்வரனும் கையெழுத்திட்டிருந்தார். மேலும், இரண்டு கடிதங்களை அனுப்பவுள்ளதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார். ஆனால், அவைகள் அனுப்பப்படவில்லை. இதற்காக யார் வெட்கப்படவேண்டும்?

இணைத்தலைமை நாடுகள் அனைத்திற்கும் சொந்த அரசியல் நிகழ்சிநிரல்கள் உண்டு. அதனடிப்படையில் இறுதி முடிவுகளை அவர்கள் எடுப்பார்கள். ஆனால், அவர்களது நலன்களை துல்லியமாக விளங்கிக்கொண்டு, ஒற்றுமையாக தமிழர் தரப்பு விடயங்களை கையாளவேண்டும். ஆனால், அது முன்னரும் நடைபெறவில்லை. இப்போதும் நடைபெறவில்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால், உண்மையில் தமிழ் மக்களின் தலைவர்களாக வலம்வருபவர்கள் தான் இதற்காக வெட்கித்தலைகுனிய வேண்டும்.

**ஜெனிவா:**

# 'தமிழ் மக்களை இனி இறைவன்தான் காப்பாற்ற வேண்டும்' - தந்தை செல்வா

- அலசுவது இராஜதந்திரி -

இன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் ஆரம்பமாகிறது. முன்னாள் வடமாகாண சபை முதலமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன் ஐ. நா. மனித உரிமைப்பேரவையில் புதிய பிரேரணைக்கான வரைவு ஏமாற்றம் அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர் விவகாரம் எதிரொலிக்க ஆரம்பித்து இந்த ஆண்டுடன் ஆறு வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. ஜெனிவாவைப் பொறுத்தவரை வடக்கு-கிழக்கு தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் விட்ட தவறுகள் காரணமாகவே கடந்த காலங்களில் ஜெனிவாமூலம் எதுவும் வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு சாதகமாக அமைந்திருக்கவில்லை.

**நல்லாட்சி அரசு**

மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்கவின் நல்லாட்சி அரசு வடக்கு-கிழக்கின் தமிழ் பேசும் மக்களின் பேராதரவினாலேயே அமைக்கப்பட்டிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது. தென்னிலங்கை மக்களின் ஆதரவும், ஒரு பரந்துபட்ட நல்லிணக்கத்துடன் கூடிய சமாதான, சகவாழ்வுக்காக நல்லாட்சி என்றழைக்கப்பட்ட மைத்திரிபால - ரணில் விக்கிரமசிங்க அரசுக்கு அன்று வழங்கப்பட்டிருந்தது.

எனவே, இலங்கை மீதான ஜெனிவா பிரேரணை அமெரிக்காவினால் முதல் தடவையாக கொண்டுவரப்பட்டபோது அப் பிரேரணையை நிறைவேற்றுவதில் காலதாமதங்களை ஏற்படுத்திக்கொடுப்பதில் இலங்கை அரசுக்கு துணை நின்றவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பினரே என்பது குறிப்பிடத்தக்கது. இதன்காரணமாகவே, சி. வி. விக்னேஸ்வரன் வடக்கு-கிழக்கு தமிழ் பிரதிநிதிகள் என்று கூறுவோர் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைப்பேரவை உறுப்புநாடுகளிடம் சென்று இத்தடவை கொண்டுவரப்படவுள்ள பிரேரணையில் கையாளப்படவேண்டிய பிரச்னைகள் குறித்து குறைவாக எதனையும் கூறினார்களோ என்று சந்தேகப்படவேண்டியுள்ளது எனத்தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரன் வெளியிட்டுள்ள இக்கருத்து நியாயமானதுபோன்றே தென்படுகின்றது. ஏனெனில், கடந்த ஆறு வருடங்களாக ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் அமெரிக்கா தலைமையில் கொண்டுவரப்பட்ட பிரேரணையை நிறைவேற்றுவதில் இலங்கை அரசுக்கு காலதாமதங்களை ஏற்படுத்திக் கொடுப்பதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தனது பங்களிப்பை வழங்கியிருந்தது.

ஜெனிவாவில் இலங்கைமீதான பிரேரணை கொண்டுவரப்பட்டபோது மனித உரிமைப்பேரவை உறுப்புநாடுகள் அப் பிரேரணையை நிறைவேற்றவேண்டுமென்பதில் மிக ஆர்வமாக இருந்தன.

ஐ.நா. மனித உரிமைப்பேரவை உறுப்புநாடுகளின் நோக்கமெல்லாம் யுத்தக்குற்றங்கள் என்று கண்டறியப்பட்டவை விசாரிக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படவேண்டுமென்பதோடு, புதியஅரசியலமைப்பின் ஊடாக இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு நல்லிணக்கத்துடன் கூடிய சமாதான சகவாழ்வை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்பதே முக்கிய நோக்கமாக இருந்தது.

ஆனால், முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன், ஐ.நா. மனிதஉரிமைப் பேரவையில் கொண்டுவரப்படவுள்ள புதிய பிரேரணை குறித்து மேலும் கருத்து வெளியிடுகையில், யுத்தக்குற்றங்களில் ஈடுபட்டோர் இலங்கையில் தப்பிச்செல்வதற்கான வாய்ப்பை புதிய பிரேரணை கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

சி. வி. விக்னேஸ்வரனின் இக்கருத்தை நோக்கும்போது, சர்வதேச சமூகமும் இலங்கை மீதான புதிய பிரேரணை குறித்து போதியளவு கரிசனை கொண்டிருக்கவில்லையென்பதே புலனாகின்றது.

இத்தகைய நிலைக்கு கடந்த காலங்களில் கொண்டுவரப்பட்ட பிரேரணைகள் குறித்து வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ் பிரதிநிதிகள் ஜெனிவாவில் இலங்கையரசுக்கு சாதகமான போக்கை கடைப்பிடித்ததே முக்கியகாரணமாகும்.

எனவே, இத்தடவை ஜெனிவா மனித உரிமைப் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடரின்போது கொண்டுவரப்படவுள்ள புதிய பிரேரணை எவ்வளவு தூரம் இலங்கை அரசை யுத்தத்திற்குப் பின்னரான மனித உரிமைமீறல்கள் குறித்து நீதிவழங்க செய்யுமென்பது சந்தேகமாகவே இருக்கின்றது.


**புலம் பெயர்ந்தோர்**

புலம்பெயர் தமிழர்களைப் பொறுத்தவரை பெரும்பாலானவர்கள் இலங்கையில் நிலவிய மூன்று தசாப்தகால யுத்தத்தின் ஆரம்ப காலங்களில் பெரும்பாதிப்புகளைச் சந்தித்தோராக இருக்கின்றனர்.

இதன் காரணமாக, புலம்பெயர் தமிழர்கள் ஜெனிவாவில் கடந்த 6 வருடங்களாக இலங்கை மீதான பிரேரணை கொண்டுவரப்பட்ட போதெல்லாம் தமது மன ஆதங்கங்களை வெளியிட்டிருந்தனர்.

இருந்தபோதிலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவாவில் ஓர் உறுதியான நிலைப்பாட்டை எடுக்காத காரணத்தினாலும், இலங்கையில்கூட நல்லாட்சி அரசாங்கம் என்ற கடந்தகால (02ஆம் பக்கத் தொடர்ச்சி)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பிப்ரவரி - 22 திங்கட்கிழமை
சார்வரி வருடம் - மாசி -10
நல்ல நேரம் : 6.00 - 7.30
எமகண்டம் : 10.30 - 12.00
திதி : தசமி




### மேடம்



வளர்ச்சி கூடும் நாள். வாரிசுகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். தொல்லை தந்த வாகனத்தை மாற்றி புதிய வாகனம் வாங்குவது பற்றிச் சிந்திப்பீர்கள். வியாபார விரோதங்கள் விலகும்.

### இடபம்



பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். வீண் விரயங்கள் ஏற்படலாம். அனாவசியச் செலவுகள் அதிகரிக்கும். குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்வதன் மூலம் பிரச்னைகள் ஏற்படலாம்.

### மிதுனம்



வரன்கள் வாயில் தேடி வரும் நாள். வருமானம் திருப்தி தரும். வீட்டை விரிவுபடுத்திக் கட்டும் எண்ணம் மேலோங்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். பயணம் பலன் தரும் விதம் அமையும்.

### கடகம்



தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள். கொடுத்த பாக்கிகளை நாசூக்காகப் பேசி வசூலிப்பீர்கள். இனிய சம்பவமொன்று இல்லத்தில் நடைபெறும். உயர்மட்ட அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

### சிம்மம்



தொழிலை விரிவுபடுத்த தொகை வந்து சேரும் நாள். நாணயமும், நேர்மையும் கொண்ட நண்பர்களால் நம்பிக்கை நடைபெறும். உறவினர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும்.

### கன்னி



இனிமையான நாள். இல்லம் தேடி நல்ல செய்தி வந்து சேரும். பிரியமான நண்பர்கள் நீங்கள் கேட்ட பொருட்களை வாங்கிக்கொடுப்பர். பணியாளர்களுடன் இருந்த பனிப்போர் விலகும்.

### துலாம்



பற்றாக்குறை அதிகரிக்கும் நாள். பணத்தேவைகள் கடைசிநேரத்தில் பூர்த்தியாகும். பங்குதாரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்க மறுப்பர். கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை

### விருட்சிகம்



அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள். அடுத்தவர்நலன் கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் கிடைக்கும். தொழில்முன்னேற்றம் கருதி முக்கியப் புள்ளிகளைச் சந்திப்பீர்கள்.

### தனுசு



மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். சகோதர வழியில் நன்மை உண்டு. எதிர்கால நலன் கருதி முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். பிரியமானவர்களுடன் பயணங்களை மேற்கொள்ளும் வாய்ப்பு உருவாகும்.

### மகரம்



எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள். எதையும் எளிதில் செய்து முடிப்பீர்கள். ஆடம்பரப்பொருட்களை வாங்கி மகிழும்வாய்ப்பு உண்டு. ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

### கும்பம்



கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும் நாள். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். பூர்வீக சொத்தை விற்றுப் புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும்.

### மீனம்



தேவைக்கேற்ற பணம் தேடி வரும் நாள். நண்பர்களின் சந்திப்பால் நலன் காண்பீர்கள். குடும்பவருமானத்தை உயர்த்த புது முயற்சிகள் எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் நன்மை உண்டு.

# 600 கிராம் எடையுடன் பிறந்த சிசு; பூரண சுகதேகியாக மாற்றப்பட்டது

## யாழ். போதனா வைத்தியசாலை சாதனை



சுகதேகியான குழந்தை

யாழ்ப்பாணம், பெப். 22

600 கிராம் எடையுடன் பிறந்த சிசுவை மருத்துவர்கள் கடும் முயற்சிகளால் சுகதேகியாக நலன் பெற்றுள்ளது என்று தெரிய வருகின்றது.

பருத்தித்துறையை சேர்ந்த தாய் ஒருவர் 6 மாத காலத்திலேயே சிசுவை ஈன்றெடுத்தார். சாதாரண கர்ப்ப காலம் 40 வாரங்களாக உள்ளபோதும் 24 வார கர்ப்பத்தில் பிறந்தமையால் அந்தக் குழந்தை 600 கிராம் எடையுடனேயே இருந்தது.

இதனால், சிசு பராமரிப்பு வைத்திய நிபுணர் டீபோல் நவரட்ண தலைமையிலான மருத்துவக் குழுவினர் 4 மாதங்களாக எடுத்த முயற்சியால் குழந்தை பூரண நலமாக தற்போது தாயாருடன் வீடு சென்றுள்ளது. இது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வரலாற்றில் முதலாவது சம்பவமாக பதிவிடப்படுகின்றது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நீண்டகாலம் சிசு பராமரிப்பு வைத்திய நிபுணர் வெற்றிடமாக இருந்தபோதும் தற்போது அந்த வெற்றிடம் நிரப்பப்பட்ட நிலையில் குறித்த சிகிச்சை அளிக்கப்படுகிறது.



மருத்துவர் டீபோல் நவரட்ண

அதேநேரம் தற்போது மற்றுமோர் தாயார் 25 வாரங்கள் கர்ப்ப காலத்தில் பிரசவித்த குழந்தையும் சுகதேகியாக வைத்தியசாலையில் பராமரிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### வைத்தியசாலை வீதியில் பஸ் சேவை தடை:

# வெளிமாவட்ட நோயாளர் நலனில் கவனம் கொள்வது அவசியமானது

### மருத்துவர் யமுனாநந்தா வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வைத்தியசாலை வீதியின் ஊடாக வெளிமாவட்ட போக்குவரத்து பேருந்துகள் பயணிப்பது தடை செய்யப்படுவது, வெளிமாவட்டங்களில் இருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு வரும் ஏழை நோயாளிகளுக்கும் அவர்களின் உறவுகளுக்கும் சிரமத்தை ஏற்படுத்தும்

இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி. யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

'முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் இருந்து அதிகளவிலான மக்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அன்றாடம் வருகின்றனர். இதனை நாம் கடந்த பல ஆண்டுகளாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இதய சிகிச்சைப்பிரிவு, நரம்பு சத்திர சிகிச்சைப்பிரிவு, கண் நோயியற்பிரிவு என்பவற்றிற்கு இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் நோயாளர்கள் இங்கு வருகை தருகின்றனர். இதுவரை காலமும் இத்தகைய பிரதேசங்களில் இருந்து வரும் நோயாளர்கள் வைத்தியசாலை வாயிலில் உள்ள பேருந்து தரிப்பிடத்தில் இறங்கி வைத்தியசாலைக்கு உடனடியாக வரக்கூடியதாக இருந்தது.

'நெடுந்தூரம் நடக்க முடியாத நோயாளிகள் கூட இவ்வாறு சிகிச்சைக்கு வருவது வழமை.

யாழ். வைத்தியசாலை வீதியில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த வாகனத் தரிப்பிடங்களை மட்டுப்படுத்தலாம். அடுத்து வைத்தியசாலை வீதியில் புதிய தொழில் முயற்சியாளர்கள், பல்பொருள் அங்காடிகள், வங்கி கட்டடத்தொகுதிகள், தனியார் வைத்திய நிலையங்கள், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் போன்றவற்றை அமைக்க அனுமதித்தமையும் வைத்தியசாலை வீதி வாகன நெரிசல் அடையக் காரணமாகும்.", என்றுள்ளது.

(ஐ-3)

# பண்பாடு அமைச்சின் விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், பெப். 22

வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் 2021 ஆம் ஆண்டிற்கான பதிவு செய்யப்பட்ட கலை இலக்கிய மன்றங்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகள், அரச உத்தியோகத்தர்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகள், வடக்கு மாகாண கலைக் குரிசில் விருது, வடக்கு மாகாண இளைஞர் விருது, சிறந்த நூல், வட மாகாண நூல் கொள்வனவு, நடுவர் தெரிவு ஆகிய வேலைத் திட்டங்களிற்கு பொருத்தமான பயனாளிகளை தெரிவு செய்வதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இணைய விரும்புபவர்கள் அலுவலக நேரத்தில் பிரதேச செயலகங்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. இவற்றுக்கான இறுதித் திகதி 31.03.2021 ஆகும். (ஐ)

# சாவகச்சேரியில் கூடிய பௌத்தர்கள்; ஊரவர்கள் திரண்டதால் அகன்றனர்!

தென்மராட்சி, பெப். 22

சாவகச்சேரி நுணாவில் மணங்குணா பிள்ளையார் கோவிலுக்கு அருகில் பௌத்தமத பக்தர்கள் கூடியதால் குழப்பம் ஏற்பட்டது.

நேற்று காலை ஏ - 9 வீதியின் நுணாவில் மணங்குணா பிள்ளையார் கோவிலடியில் சுமார் 8 கார்கள் மற்றும் இரண்டு படி ரக வாகனங்களில் வெள்ளை நிற ஆடைகளுடன் பௌத்தர்கள் வந்து இறங்கியிருந்தனர்.

சிறிய பிள்ளையார் சிலை வைக்கப்பட்டுள்ள மருத மரத்தின் கீழ் அவர்கள் ஒன்றுகூடியமையால், சந்தேகமடைந்த ஊரவர்கள் அவர்களிடம், 'ஏன் இங்கு நிற்கிறீர்கள்", என்று வினவினர்.

தாம் சமைத்து உண்பதற்காகவே அங்கு தங்கியுள்ளனர் என்று அவர்கள் தெரிவித்தனர்.

எனினும் அவர்களின் நடவடிக்கைகளால் சந்தேகமடைந்த இளைஞர்கள், இது தொடர்பாக சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் உறுப்பினர் கிஷோர் உள்ளிட்டோருக்கு தெரியப்படுத்தினர். இதைத் தொடர்ந்தும் அவரும், அவருடன் ஊர் மக்களும் கூடினர்.

இதையடுத்து வாகனங்களில் வந்தவர்கள் உடனடியாகவே அங்கிருந்து அகன்று சென்றனர் என்று கூறப்பட்டது.

அவர்கள் புத்தர் சிலையை அங்கு வைக்க முயன்றிருக்கலாம் என்று அவர்கள் சந்தேகம் எழுப்பினர். ஏனெனில், மருதமரப் பிள்ளையார் ஆலயத்தின் எதிரே தொல்பொருள் திணைக்களம் அடையாளப்படுத்திய இளைப்பாறும் மடம், சுமைதாங்கி, ஆவுரஞ்சிகல், கேணி, கிணறு என்பன அமைந்துள்ளன. இதனாலேயே அவர்கள் அங்கு கூடியிருக்கலாம் என்று முன்னாள் நகர சபை உறுப்பினர் கிஷோர் சந்தேகம் வெளியிட்டார். அத்துடன் இதன் முக்கியத்துவம் குறித்தும் இளைஞர்களுக்கு விழிப்புணர்வூட்டினார்.

(ஐ)

# இராணுவத்தினரின் பிடியிலிருக்கும் வெளிச்சவீட்டை மீட்டு தாருங்கள்!

## பருத்தித்துறை மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 22

பருத்தித்துறையின் அடையாளமாக ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக உள்ள வெளிச்ச வீட்டை இராணுவத்தினரிடம் இருந்து மீட்டு மக்கள் பாவனைக்கு தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில் போர்த்துக்கேயர் காலத்தில் 1916ஆம் ஆண்டு இந்த வெளிச்சவீடு அமைக்கப்பட்டது, இது 105 அடி உயரத்தைக் கொண்டது. வடமராட்சியிலுள்ள ஒரேயொரு வெளிச்சவீடு இதுவாகும். பருத்தித்துறையின் அடையாளமும் வரலாற்று சிறப்பு மிக்கதுமான இந்த வெளிச்ச வீடு கடந்த 1996ஆம் ஆண்டு முதல் இராணுவம் ஆக்கிரமித்துத்துள்ளது.

இராணுவ ஆக்கிரமிப்பிற்கு முன்னர், இந்தக் கலங்கரை விளக்கின் உதவியுடனனேயே இப்பகுதி மீனவர்கள் தமது தொழில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். ஆனால், கடந்த 25 ஆண்டுகளாக மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இந்த வெளிச்ச வீட்டை மக்கள் பாவனைக்கு அனுமதிக்குமாறு கடந்த பருத்தித்துறை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் மீனவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மீனவர் சங்கப் பிரதிநிதிகள் முன்வைத்த இந்தக் கோரிக்கைக்கு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் எம். பியுமான அங்கஜன் இராமநாதன் பதிலளிக்கையில், 'இது தொடர்பாக உரிய அமைச்சர்களுடன் பேசி விரைவில் வெளிச்ச வீட்டை பொதுமக்கள் பாவனைக்கு அனுமதிக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (ஐ)

# சர்வதேசத்தின் தீர்மானங்களை மாற்றுவதற்கு கட்சிகள், சிவில் சமூகங்கள் இணையவேண்டும்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அழைப்பு




கிளிநொச்சி, பெப். 22

**தமிழ் தேசிய கட்சிகள் சிவில் சமூகங்கள் ஒன்றுபட்டு சர்வதேச சமூகத்தின் தீர்மானத்தில் மாற்றங்கள் கொண்டுவர வேண்டும் என்று வடக்கு, கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அமைப்பின் தலைவர் ப.கருணாவதி தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி ஊடக மையத்தில் நேற்று அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

சர்வதேச சமூகத்தின் தீர்மானத்தில் மாற்றங்கள் கொண்டு வர தமிழ் தேசிய கட்சிகள் சிவில் சமூகங்கள் ஒன்றுபட வேண்டும். இலங்கை தொடர்பில் சர்வதேச சமூகத்தால் இதுவரை வெளியிடப்பட்டுள்ள தீர்மானத்தில் தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தில் சில முக்கிய விடயங்களில் முன்னேற்றம் காணப்படவில்லை.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைக்கு முன்னேற்றம் ஏற்படவேண்டும் என்பதை ஆராய வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் தலைவர்கள், வடக்கு - கிழக்கு சிவில் சமூகத்தின் தலைவர்கள், மத குருக்கள், பல்கலைக்கழக மாணவர் சமூகம், அரசியல் ஆய்வாளர்கள், சட்டத்தரணிகள், வலிந்து காணாமல் ஆக்கப்படவர்களின் உறவினர்கள் சங்கங்கள், ஒன்று கூடி பொது நிலைப்பாட்டிற்கு வர வேண்டிய நிலையில் உள்ளோம்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் முன்னர் வெளியிட்ட அறிக்கையில் தமிழர்களை ஒரு தேசமாக அடையாளப்படுத்த தவறியமை தமிழ் மக்களை பொறுத்தவரையில் சர்வதேச நீதி தொடர்பிலும், மற்றும் நிரந்தர அரசியல் தீர்வு தொடர்பிலும் பல பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. இதில் மாற்றம் வர வேண்டியது அவசியம்.

சர்வதேச சமூகத்திடம் இருந்து தீர்க்கமான நீதியான முடிவு எடுக்கவேண்டிய தேவையும் கடப்பாட்டிலும் தமிழர்கள் உள்ளோம். இதனை தாங்கள் அனைவரும் அறிந்தீர்கள், அது தொடர்பில் சிந்தித்தீர்கள் செயற்பட்டீர்கள் என்பது அறிந்த விடயம் .

ஆனாலும் தங்களால் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் உள்ளிட்ட ஐ.நா உறுப்பு நாடுகளுக்கு முன்னர் அனுப்பப்பட்ட கடிதத்தில் இன்னும் சில விடயங்களை குறிப்பிட்டு மிகவும் ஒரு பலம் பொருந்திய வரைபாக மாற்றி முன்னர் கையொப்பம் இடாதவர்களையும் ஒன்றிணைத்து குறுகிய நாளுக்கள் வரைபை அனுப்பிவைக்க தாங்கள் அனைவரும் முன்வருவீர்கள் என நாம் நம்புகின்றோம் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன்கிழமை கிளிநொச்சி கனக புரம் வீதியில் அமைந்துள்ள செல்லா விருந்தினர் விடுதியில் காலை 9.00 மணிக்கு இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)




# மனித உரிமைகள் கவுன்ஸில் தீர்மானம் வருத்தமளிக்கிறது

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, பெப். 22

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் ஆரம்பத் தீர்மானத்தில் தமிழ் அல்லது தமிழர்கள் பற்றி எதுவும் குறிப்பிடாமை வருத்தம் அளிக்கிறது என்று வவுனியா காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்தனர்.

1465ஆவது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இதன்பின்னர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

'பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான அமைதியான ஆர்ப்பாட்டத்தை கொழும்பு சார்ந்த செய்தி ஊடகங்கள் இருட்டடிப்பு செய்ததற்காக கண்டனம் தெரிவித்த அமெரிக்க தூதர் டெப்லிட்ஸினுக்கு நன்றி கூற விரும்புகிறோம். இது எங்கள் அமைதியான மற்றும் ஜனநாயக ஆர்ப்பாட்டத்தையும் போராட்டங்களையும் தொடர்வதற்கு ஊக்குவிக்கிறது.

ஐக்கிய நாடுகள் அமர்வுக்கு முன்னர் ஓர்அரசியல் தீர்வு குறித்து சிங்கள அரசாங்கத்துடன் பேசிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கையை நாங்கள் கண்டிக்கிறோம். இது தமிழர்கள் சிங்களவர்களுடன் இணைந்து பணியாற்றலாம் என்பதை உலகிற்கு காட்டுகிறது.

தமிழர்களுக்கு அமெரிக்கா அல்லது இந்திய தலைவீடுகள் தேவையில்லை என்பதை அது வலியுறுத்துகிறது. இலங்கைக்கு எதிரான எந்தவொரு வலுவான தீர்மானத்தையும் நீக்குவதற்கான ஒரு பொறியே இது.சுமந்திரன் எப்போதுமே, அமெரிக்கா அல்லது இந்தியாவின் தலையீட்டில் தமிழர்கள் ஆர்வம் காட்டவில்லை என்பதை மறைமுகமாக உலகுக்குக் காட்டும் முயற்சியையே முன்னெடுக்கிறார்.

மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஆரம்பத் தீர்மானம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் வாக்கெடுப்பின் தேவையை நிவர்த்தி செய்யவில்லை என்பதில் நாங்கள் வருத்தப்படுகிறோம். அவர்களின் தீர்மானத்தில், தமிழ் அல்லது தமிழர்கள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. இந்த தீர்மானம் தமிழர்களை சங்கடப்படுத்துகிறது மற்றும் இது பாதிக்கப்பட்டவர்களுக்கும், இறந்தவர்களுக்கும் எந்த மரியாதையும் கொடுக்கவில்லை.

1465 நாட்களுக்கும் மேலாக தமிழர்களுக்கும் நமது தமிழ் அரசியல்வாதிகளுக்கும் நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கும் விஷயமே இது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியாவை, அரசியல் தீர்வுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் தமிழர்களுக்கு உதவ தலையிடுமாறு அழைப்பு விடுத்து வருகிறோம் - என்றனர். (ஐ)

# 18 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் தடுப்பூசி

கொழும்பு, பெப். 22

நாட்டில் 18 வயதுக்கும் குறைந்தோர், கர்ப்பவதித் தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மார் ஆகியோரை தவிர ஏனைய அனைவருக்கும் கொரோனா தடுப்பூசிகள் வழங்கப்படும் என பதில் சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அபாயம் மிகுந்த வலயங்களிலேயே முதலில் தடுப்பூசிகள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# 'வவுனியம்' நூல் வெளியீடு

வவுனியா, பெப். 22

வவுனியா பிரதேச கலாசார பேரவை மற்றும் கலாசார அதிகாரசபை இணைந்து ஏற்பாடு செய்துள்ள "வவுனியம்-04" கலை இலக்கிய பண்பாட்டு நூல் வெளியீட்டு விழா நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் இடம்பெறும். வவுனியா சபிரதேச செயலாளர் நா.கமலதாசன் தலைமையில் இடம்பெறும் இந்நிழ்வில் முதன்மை அதிதியாக மாவட்ட அரச அதிபர் சமன்பந்துலசேன கலந்து கொள்வார்.

சிறப்பு அதிதியாக மேலதிக அரச அதிபர் தி. திரேஸ்குமார், கௌரவ அதிதியாக நாதஸ்வர வித்துவான் மு.சண்முகநாதன் ஆகியோர் கலந்துகொள்வர்.

## பணியாளருக்கு தொற்று உறுதி

# யாழ்ப்பாணம் டயலொக் நிறுவனம் மறுஅறிவித்தல்வரை மூடப்பட்டது

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ். மாநகரில் அமைந்துள்ள டயலொக் நிறுவனத்தின் பணியாளர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து அந்த நிறுவனம் மறு அறிவித்தல்வரை மூடப்பட்டதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் மருத்துவர் ஆர்.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள டயலொக் நிறுவனத்தின் வாடிக்கையாளர் சேவை நிலையத்தில் பணியாற்றுபவருக்கே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அந்த நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் வாடிக்கையாளர் சேவை நிலையத்தில் பணியாற்றுபவர்களுக்கு கொழும்பு தனியார் வைத்தியசாலை ஊடாக பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. இதன் முடிவு நேற்று முன்தினம் வெளியானது. இதிலேயே ஒருவருக்கு தொற்று உறுதியானது. இதையடுத்து அந்த நிறுவனத்தின் ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இதேவேளை, அண்மை நாட்களில் வாடிக்கையாளர் சேவை நிலையத்துக்கு சென்ற பொதுமக்களும் அடையாளம் காணப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்க உட்படுத்தப்படுவர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ஐ)

# யாழ். பல்கலைக்கழகத்தின் 15 அதிகாரிகளுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ். பல்கலைக்கழகத்தின் நிர்வாக அதிகாரிகள் உட்பட்ட உயர் மட்டத்தினர் 15 பேர் கொரோனா தடுப்பூசியை நேற்றுப் பெற்றனர்.

யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் உட்பட்ட உயர்மட்டத்தினர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நேரில் சென்று தடுப்பு மருந்தைப் பெற்றுக்கொண்டனர்.

ஏனைய நிர்வாக அதிகாரிகள் மற்றும் பீடாதிபதிகள், துறைத்தலைவர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கு அடுத்த கட்டமாக தடுப்பூசி செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரியவருகிறது.

இருந்தபோதிலும் இன்று துணைவேந்தர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவில்லை என்று தெரியவருகிறது. அவர் பட்டமளிப்பு விழாவின் பின்னர் தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொள்ளக்கூடும் என்று தெரியவருகிறது. (ஐ)

# ஓ.எல். சித்தியடையாதவர்கள் ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையை தீர்மானிப்பதா?

## கர்தினால் மல்கம் ரஞ்சித் காட்டம்



கொழும்பு, பெப்.22

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய ஜனாதிபதி நியமித்துள்ள குழுவை பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நிராகரித்துள்ளார். ஓ.எல் பரீட்சையும் சித்தியடையாதவர்கள் இதனை தீர்மானிக்க முடியாது என அவர் காட்டமாக விமர்சித்துள்ளார்.**

தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெற்ற நீர்கொழும்பு கடுவாப்பிட்டி சென். செபஸ்தியார் தேவாலயத்திற்கு முன்பாக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதன்போது பேராயர் வெளியிட்ட கருத்துக்கள் வருமாறு:

'உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை மாற்றுவதற்கா கவா ஜனாதிபதி புதிய குழுவை நியமித்துள்ளார். ஆணைக்குழுவின் அறிக்கையொன்றை நான் கோரியுள்ளேன். அத்துடன் அந்த முழு அறிக்கையும் அப்படியே பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் - என்றார்.

மேலும், அந்த அறிக்கையில் இருப்பதை மறைக்க வேண்டிய தேவையில்லை அவற்றை வெளிப்படுத்த வேண்டும். கடந்த ஒன்றரை வருடங்களாக குறித்த தாக்குதல் தொடர்பில் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை தயாரித்திருந்தது. அரசாங்கம் எவ்வித அச்சமுமின்றி மக்களுக்கு அந்த ஆணைக்குழுவின் அறிக்கையை பகிரங்கப்படுத்த வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய மீண்டும் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவில் எமக்கு நம்பிக்கையில்லை. இந்த ஆணைக்குழு அறிக்கை ஐந்து உயர்ந்த அறிவார்ந்த நபர்களால் தயாரிக்கப்பட்டது, ஓ. எல். பரீட்சைகூட சித்தியடையாத ஒரு குழு இதைப்பற்றி முடிவு செய்ய நாங்கள் எவ்வாறு அனுமதிக்க முடியும்? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கையை படித்து, மார்ச் 15 ஆம் திகதிக்குள் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த வெள்ளிக்கிழமை, அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையில் அமைச்சர்கள் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, உதய கம்மன்பில, ரமேஷ் பதிரன, பிரசன்ன ரணதுங்க, ரோஹித அபேகுணவர்தன ஆகியோர் அடங்கிய குழுவை நியமித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# எமக்கு அளித்த வாக்குறுதியை அரசாங்கம் நிறைவேற்றவில்லை

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் சாடல்

கொழும்பு, பெப். 21

2020ஆம் ஆண்டில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதாக அரசாங்கம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று ஒன்றிணைந்த வேலையில்லா பட்டதாரிகள் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

2020 ஆம் ஆண்டில் 60 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்குவதாக தற்போதைய அரசாங்கம் உறுதியளித்த போதிலும், வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது என்று சங்கத்தின் தலைவர் ஞானானந்த தேரர் கூறினார்.

“அரசாங்கமும் அமைச்சரவை செய்தித் தொடர்பாளரும் உறுதிமொழியை நிறைவேற்றியதை போல இப்போது செயல்படுகிறார்கள். கடந்த காலத்தில் எங்கள் கோரிக்கைகளை வென்றெடுக்க வீதிகளில் இறங்க வேண்டியிருந்தது, எனவே ஆர்ப்பாட்டங்களுக்கு தயங்க மாட்டோம்“ என அவர் தெரிவித்தார். இந்த விவகாரங்களில் தலையிட்டு வேலையில்லாத பட்ட தாரிகளுக்கு நியமனங்கள் வழங்குமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# ஒன்றரை இலட்சம் சீனர்கள் 6 மாதத்தில் இலங்கை வருவர்

## சீனவுக்கான தூதுவர் பாலித கோஹன

பீஜிங், பெப். 22

நடப்பு ஆண்டின் இறுதி ஆறு மாதங்களில் மட்டும் சீனாவில் இருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் சுற்றுலா பயணிகளை அழைத்து வர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று சீனாவுக்கான இலங்கை தூதுவர் கலாநிதி பாலித கோஹன தெரிவித்தார்.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன என்றும், இவற்றுக்கான விமானப் பயணங்களை ஏற்பாடு செய்வது தொடர்பாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சீனாவுக்கான இலங்கை தூதுவராக பணியாற்றும் கலாநிதி பாலித கோஹன அங்கு பல்வேறு தரப்புக்களை சந்தித்து பேச்சு நடத்தி வருகின்றார். தற்போது சுற்றுலாத்துறை பெரும் பாதிப்புக்களை சந்தித்திருக்கின்றது. இந்நிலையில் சுற்றுலா துறையை மீளக் கட்டியெழுப்ப வேண்டியது அனைவரினதும் கடமையாகும். முக்கியமாக வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை எதிர்வரும் காலங்களில் இலங்கைக்கு வரவழைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கையில் பல இலட்சக்கணக்கான மக்கள் இந்த சுற்றுலாத்துறையில் தங்கி வாழ்கின்றனர். எனவே அவர்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதற்காக நாம் சுற்றுலாத்துறையை செயற்படுத்தவேண்டிய தேவை காணப்படுகின்றது. அந்த வகையில் வருடத்தின் இறுதி ஆண்டில் சீனாவில் இருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றேன். எனவே, இவ் ஆண்டின் இறுதி அரையாண்டில் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் சீன சுற்றுலா பயணிகள் இலங்கை வருவார்கள் என்பதை உறுதியாகக் கூறுகின்றேன் - என்றார்.

# இரத்த தானம் செய்யுங்கள்!

## இரத்த வங்கி அழைப்பு

கொழும்பு, பெப். 22

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் நெருக்கடி காரணமாக, நாட்டில் இரத்ததான முகாம்கள் ஒழுங்கு செய்யப்படுவது குறைவடைந்துள்ளது. இதனால், தேசிய இரத்த வங்கியில் இரத்த சேமிப்பு குறைவடைந்துள்ளது என்று இரத்த வங்கி தெரிவித்துள்ளது.

நாட்டிலுள்ள வைத்திய சாலைகளுக்குத் தேவையான இரத்தத்தில் சுமார் 90 சதவீதமான குருதி, இரத்த தான முகாம்கள் மூலமாகவே பெறப்படுகின்றன. எனவே, இந்த இரத்த வங்கியில் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு முன்னர், இரத்த தானம் வழங்க முன் வருமாறு. கொடையாளர் களுக்கு அழைப்பு விடுப்பதாக, தேசிய இரத்த வங்கி அறிவித்துள்ளது.

# ஓ.எல். பரீட்சார்த்திகளுக்கு விசேட சலுகைகள் அறிமுகம்

கொழும்பு, பெப். 22

இம்முறை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு விசேட சலுகைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், பரீட்சை அனுமதிப்பத்திரத்தில் ஏதேனும் சிக்கல்கள் காணப்படுமாயின் www.doenets.lk என்ற இணையத் தளத்திற்கு பிரவேசித்து அவற்றை நிவர்த்தி செய்து கொள்வதற்கான வசதி செய்யப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் சனத் பூஜித குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலை பரீட்சார்த்திகள் அதிபர்களூடாகவும் தனியார் பரீட்சார்த்திகளாயின் அவர்களே குறித்த இணையத்தள முகவரிக்கு பிரவேசித்து ஒரு வாரத்திற்குள் திருத்தங்களை மேற்கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதும், அதன் பிரதியொன்றை பரீட்சை அனுமதிப்பத்திரத்துடன் இணைத்து பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் முதற்தடவையாக பரீட்சைகள் திணைக்களத்தினால் இவ்வாறான சலுகைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# ஆயிரம் ரூபா சம்பளத்தை மறுக்கும் கம்பனிகளை அரசு பொறுப்பேற்கும்

கொழும்பு, பெப். 22

ஆயிரம் ரூபா சம்பளம் வழங்க மறுக்கும் இரு கம்பனிகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இது தொடர்பில் நாளை செவ்வாய்க்கிழமை அந்த நிறுவனங்களுடன் பேச்சு நடத்தும் என்றும் தெரிய வருகின்றது.

இந்தத் தகவலை பெருந்தோட்டத்துறை அமைச்சின் உயர்வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விடயம் குறித்து மேலும் அறிய வருவதாவது:

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படை வேதனத்தை 1000 ரூபாவாக அதிகரித்து வழங்க வேண்டும் என்று கடந்த 8 ஆம் திகதி சம்பள நிர்ணயசபை தீர்மானித்திருந்தது. ஆனால் அதற்கு எதிராக பெருந்தோட்ட நிறுவனங்கள் ஆட்சேபனை தெரிவித்து வருகின்றன.

இந்நிலையிலேயே, ஆயிரம் ரூபா சம்பளம் வழங்க மறுக்கும் இரு கம்பனிகளை அரசாங்கம் பொறுப்பேற்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து இந்த இரண்டு பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளை எதிர்வரும் செவ்வாய்கிழமை அரசாங்கம் பேச்சுக்கு அழைத்துள்ளது.

இதன்போது அந்த நிறுவனத்தின் நிதிநிலைமைகள், வருமானம், நட்டம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆய்வு செய்து அரசாங்கம் முக்கிய தீர்மானம் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற கார் விபத்து:
## பெண் படுகாயம்!

திருகோணமலை, பெப். 22
யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்கு சென்ற கார் விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுக் காலை ஹொரவ பொத்தானை - திருகோணமலை பிரதான வீதியில் இந்தச் சம்பவத்தில் திருகோணமலை பாலையூற்றை சேர்ந்த பீ. நிலாசினி (வயது 29) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த கார், வளைவொன்றில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக் குள்ளானது. இது தொடர்பில் உப்புவெளி பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ)




# போரதீவுப்பற்று செயலகத்தில் தமிழர் பாரம்பரிய பொங்கல்!

மட்டக்களப்பு, பெப். 22
தமிழர்களின் பாரம்பரிய முறைப்படி களவெட்டிப் பொங்கல் போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

பண்பாட்டு முறைகளை எதிர்கால சந்ததிகளுக்கு எடுத்துச் செல்லும் வகையில் விவேகானந்தபுரம் நாகதம்பிரான் ஆலயத்தில் இருந்து வேளாண்மை அறுவடை செய்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட வேளாண்மை பழனியர் வட்டை எனும் இடத்தில் அமைந்தள்ள வரலாற்று சிறப்பு மிக்க ஆயிரம்கால் மண்டப ஆலயத்தில் வைத்து பாரம்பரிய முறையில் சூடுமிதிக்கப் பட்டது.

இதைத் தொடர்ந்து நெல்லை உரலில் குற்றி பாரம்பரிய முறையில் பொங்கல் பொங்கி படைத்து பூசைகள் இடம்பெற்றன. இதன் போது பழுகாமம் பாண்சாலி கலைக் கழகத்தின் கவியரங்கமும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மட்டக்களப்பு மாவட்டத்திற்கான உணவு களஞ்சியம் திறந்து வைப்பு

மட்டக்களப்பு, பெப். 22
மட்டக்களப்பு கல்வியங்காட்டில் புனரமைக்கப்பட்ட உணவு களஞ்சியசாலையை வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று திறந்து வைக்கப்பட்டது.

யுத்தத்தால் பாதிக்கப்படு பயன்படுத்த முடியாதளவு சேதமடைந்த இந்தக் உணவு களஞ்சியம் சுமார் 7 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது. இதைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாவட்ட அரச அதிபர் கே. கருணாகரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வரத்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இக்களஞ்சியசாலையை வைபவரீதியகத் திறந்து வைத்தார். இதில், இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர் சிவனேசதுரை சந்திரகாந்தன் எனப் பலர் பங்கேற்றனர்.

இங்கு உரையாற்றிய அமைச்சர் பந்துல குணவர்த்தன கூறுகையில்,

சுதந்திரத்திற்குப் பின் வந்த எந்த அரசாங்கமும் விவசாயிகளுக்கு வழங்காத பெரிய ஏற்பாடுகளையும், வசதி வாய்ப்புக்களையும் இந்த அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. வேண்டியளவு நெல்உற்பத்தி செய்வதற்குத் தேவையான உரம், நீர் என்பவற்றை இலவசமாக வழங்கியுள்ளது. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் அரிசியை முழுமையாக நிறுத்தியிருக்கிறது. நாடு அரிசிக்கு கிலோ 50 ரூபா வையும், சம்பாவிற்கு 52 ரூபா வினையும் விலை நிர்ணயம் செய்திருக்கிறது. இதனால் குறைந்த செலவில் நெல்உற்பத்தி செய்தது விவசாயிகள் இலாபம் பெறக் கூடியதாக உள்ளது. இதனால் விவசாயிகளையும், நுகர்வோரையும் நாம் பாதுகாக்கும் பொறுப்பு எமக்குள்ளது - என்றார். (ஐ)

# பாம்பு தீண்டி சிசு மரணம்!

மட்டக்களப்பு, பெப். 22
பாம்பு தீண்டியதில் இரு மாதங்களேயான ஆண் குழந்தை ஒன்று உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை மட்டக்களப்பு - கரடியனாறு சின்னப்புல்லுமலை பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் அறிய வருபவையாவன:

நேற்று அதிகாலை நித்திரையிலிருந்த குழந்தை மயக்க நிலையில் காணப்பட்டது. இதையடுத்து அதன் பெற்றோர் உடனடியாக செங்கலடி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு குழந்தையை பரிசோதித்த மருத்துவர்கள் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். குழந்தையின் பிரதே உள்ளங்கையில் பரிசோதனையில் பாம்பு தீண்டியே மரணம் சம்பவித்ததாக தெரிய வந்தது. (ஐ)

# மனைவியை 35 தடவைகள் கத்தியால் வெட்டிய கணவன்
## திருமலையில் குரூர சம்பவம்

திருகோணமலை, பெப். 22
மனைவியை 35 தடவைகள் கத்தியால் குத்தியும் வெட்டியும் படுகாயப்படுத்தியுள்ளார் கணவன்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் திருகோணமலை கந்தளாயில் 91ஆம் கட்டை சந்தியிலே இடம்பெற்றுள்ளது.

வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மனைவியை மற்றோர் மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்துள்ளார் கணவன்.

மனைவியை வழிமறித்த அவர் அவருடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார். தர்க்கம் முற்றிய நிலையில் மோட்டார் சைக்கிளில் மறைத்து வைத்த கத்தியை எடுத்து வெட்டியும், குத்தியும் படுகாயம் ஏற்படுத்தியுள்ளார்.

இதைத் தொடர்ந்து அப் பகுதியிலிருந்து அவர் தப்பிச் சென்றுள்ளார். படுகாயமடைந்தவர் மக்களால் திருகோணமலை பொது மருத்துவமனையின் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு 35 இடங்களில் காயங்கள் ஏற்பட்டுள்ளன என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இதனிடையே, மனைவியை வெட்டிய சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.(ஐ)

# அம்பாறையில் யானைகளின் தொல்லைகள் அதிகரிப்பு!
## கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

அக்கரைப்பற்று, பெப். 22
அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துள்ள காட்டு யானைகளின் தொல்லையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இராஜாங்க அமைச்சர் விமல வீரதிஸநாயக்கவுக்கு, ஒலுவில் அஷ்ரப் நகர் மேட்டு நில பயிர்ச்செய்கையாளர்கள் சங்கத்தின் தலைவர் எஸ்.ரீ. அலாவுதீனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில்,

'ஒலுவில் அஷ்ரப் நகர், சம்புநகர், ஹிறா நகர், காரைதீவு, சம்மாந்துறை, நிந்தவூர் மற்றும் ஆலிம்நகர் ஆகிய பின் தங்கிய பிரதேசங்களில் யானைகள் தொல்லை அதிகரித்து காணப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தவிர, "எல்லைக் கிராமங்களில் வாழும் மக்கள் பீதியின் காரணமாக மாலை நேரங்களில் தங்கள் குடியிருப்பை விட்டு வெளியேறி தங்கள் குழந்தைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கும் சென்று காலையில் வீடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், பாடசாலை மாணவர்கள், பெண்கள், சிறுவர்கள், நோயாளர்கள் போன்றோர் இதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரவு நேரங்களில் கிராமங்களுக்குள் உட்புகும் யானைகள் கூட்டம், வீட்டுத் தோட்டங்களையும், சேனைப் பயிர்களையும் சேதப்படுத்தி வருவதால் விவசாயிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படுகின்றனர்.

எனவே, அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படும் காட்டு யானைகள் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு எல்லைக் கிராமங்களில் மின்சார வேலிகளை அமைத்துத் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# பொத்துவில் - பொலிகண்டி பேரணி: ஹுனைஸ் பாரூக்கிடம் வாக்குமூலம்

மன்னார், பெப். 22
பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் பங்கேற்றமை தொடர்பாக வன்னி மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹுனைஸ் பாரூக்கிடம் மன்னார் பொலிஸார் வாக்குமூலத்தை பதிவு செய்தனர்.

வன்னி மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹுனைஸ் பாரூக்கின் மன்னாரில் உள்ள அலுவலகத்திற்கு நேற்று சென்ற பொலிஸாரே வாக்குமூலத்தை பதிவு செய்தனர்.

இதன் போது நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டதா? கொரோனா அச்சுறுத்தல் உள்ள நிலையில், அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதா? உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

இதேவேளை பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் கலந்து கொண்ட மன்னார் மாவட்டத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், சட்டத்தரணிகள், உற்பட பல்வேறு தரப்பினரிடமும் கடந்த இரண்டு தினங்களாக மன்னார் பொலிஸார் வாக்குமூலத்தை பதிவு செய்து வருகின்றனர்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், முஸ்லிம்களின் ஜனாஸா எரிப்பு, தொல்பொருள் திணைக்களத்தால் காணிகள் அபகரிப்பு உட்பட சிறுபான்மை மக்கள் எதிர் கொள்ளும் பல்வேறு பிரச்னைகள் தொடர்பில், எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும், ஜெனிவா மனித உரிமை பேரவையின் கவனத்துக்கு இவற்றை கொண்டு வரும் வகையிலுமே, வடக்கு கிழக்கு சிவில் சமூகத்தினரால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

# கடலாமை இல்லையேல் கடல்வாழ் உயிர்களே இல்லை...!



கடல் சூழ்நிலை மண்டலமானது பூமியின் மிகப்பெரிய சூழ்நிலை மண்டலமாகும். இதில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை ஆமை இனங்கள் ஆகும். உலகம் முழுவதும் 360 ஆமை இனங்கள் வாழ்கின்றன. அவை ‘ஊர்வன’ வகுப்பைச் சார்ந்தவை. ஆமைகள் ‘டெஸ்டுடின்’ வரிசையில் அடங்கும். ஆமைகள் காற்றை சுவாசிக்கும் இனங்கள். அவற்றின் ஓடுகள் காரபேஸ் (மேல் ஓடு), பிளாஸ்ட்ரான் (கீழ் பிரிவு) ஆகிய இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளன. ஆமைகள் பழமையான ஊர்வன வகையாகும். அவற்றின் உடல் வெப்பநிலை சுற்றுச்சூழலுக்கு ஏற்றபடி மாறும் (குளிர் இரத்த வகை). பெரும்பாலான ஆமைகள் நீரில் வாழ்ந்தாலும் நிலத்தில் முட்டையிடுபவை (அம்னியோட்ஸ்). மணல் நிறைந்த கடற்கரைகளில் முட்டையிடுகின்றன. நுரையீரலை இளைப்பாற்றுவதற்கு அடிக்கடி மேற்பரப்புக்கு வருகின்றன.

ஆமை இனங்கள் அடிப்படையில், நீருக்குள் மூழ்கியுள்ள நேரம் 60 விநாடிகள் முதல் 1 மணிநேரம் வரை மாறுபடும். மீனவர்கள் ‘சொறி’ என்றழைக்கும் இழுது மீன்கள் (jelly fish) மற்றும் கடல் பாசிகள் கடலாமைகளின் முதன்மை உணவாகும். வளர்ந்தபின் ஆமைகள் நத்தை, புழுக்கள், பூச்சிகளைச் சாப்பிடுகின்றன. ஆமைகள் சுற்றுச்சூழல் அமைப்பின் உயிரியலில் கணிசமான இடத்தைப் பெற்றுள்ளன.

ஆமைகள் கடல் புல்படுக்கைகள், பவளப்பாறைகள், வாழ்விடங்களை வழங்குதல் ஆகியவற்றில் நேர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. ஆமைகளின் அழிவு சுற்றுச்சூழலுக்கு ஒரு சரிவாக அமையும். அவற்றின் முட்டைகள் பல உயிரினங்களுக்கு உணவாகும். கடல் ஆமைகள் அழிந்து விட்டால் தாவரங்கள் ஊட்டச்சத் துகளுக்குரிய ஒரு முதன்மை ஆதாரத்தை இழந்துவிடும். இதன்விளைவாக மணல் அரிப்பு அதிகரிக்கும். கடல் ஆமைகள் ஒரு ‘கீஸ்டோன் இனம்.’ அதாவது, சுற்றுச்சூழலை பராமரிப்பதில் அவை முக்கிய அங்கமாக விளங்குகின்றன. ஆமைகள் அழிந்துவிட்டால் இயற்கை ஒழுங்கு சீர்குலைந்துவிடும். இது மற்ற கடல் விலங்குகளையும் வெவ்வேறு வழிகளில் பாதிக்கிறது.

கடல் ஆமைகளில் மிகப் பெரியது ‘லெதர்பேக்’ ஆமைகள். அவை வெகுதூ ரம் பயணிப்பவை. லெதர்பேக் ஆமைகள் கடல் சொறி மீன்களை உண்பதன் மூலம் ஊட்டச்சத்தைப் பெறுகின்றன. அவை 440 பவுண்ட்ஸ் கடல் சொறி மீன்களை உட்கொள்கின்றன. கடல் சொறி மீன்களில் பல வகைகள் உள்ளன. அவை மீன் முட்டைகளையும் மீன் குஞ்சுகளையும் அதிகம் உட்கொள்ளும். இதனால் மீன்வளம் பெரிதளவில் பாதிப்படைகிறது. கடல் சொறி மீன்களின் எண்ணிக்கை அதிகரித்தால் மீன்வளம் முற்றிலும் பாதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. கடல் சொறி மீன்கள் எண்ணிக்கை குறைந்தால் மட்டுமே மீன் இனங்களைப் பாதுகாக்க முடியும். அவற்றில் சில வகைகள் நச்சுத்தன்மை வாய்ந்தவை.

மீனவர்களும் இவற்றை ஆபத்தான உயிரினங்களாகக் கருதுகின்றனர். அவற்றின் விஷத்தன்மை மனிதர்களுக்கு உயிர் சேதம் விளைவிக்கும். லெதர்பேக் ஆமைகள் கடல் சொறி மீன்களை உட்கொள்வதால் கடல் சொறி மீன்களின் எண்ணிக்கை அதிகரிக்காமல் தடுக்கப்பட்டு மீன்வளத்துக்கு பெரிதளவில் நன்மை தருகின்றன. இந்த வகை ஆமைகள் அழிவதால் கடல் சொறி மீன்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றன. ஆமை ஓடுகளில் உள்ள ‘பர்னாக்கல்ஸ்’ (கொட்டகைகள்) மீன்களுக்கும் இறால்களுக்கும் உணவாகின்றன. இதனால், ஆமைகளின் ஓடும் சுத்தமாகின்றன. ஆமை முட்டைகள், இளம் ஆமைகள் மற்ற உயிரினங்களுக்கு இரையாகவும் அமைகின்றன. முதிர்ச்சியடைந்த ஆமைகள் சுறாக்களுக்கு இரையாகும்.



கடல் பஞ்சுகள் (sponge) கடல் தரையில் வாழும் உயிரினங்கள் ஆகும். அவை வாழ்விடத்துக்காக பவளப் பாறைகளுடன் போட்டியிடும். கடல் பஞ்சுகளின் ஆதிக்கத்தால் பவளப் பாறைகள் வாழ்விடம் பாதிக்கப்பட்டு அழியும் வாய்ப்புண்டு. பவளப்பாறை களின் எண்ணற்ற பயன்கள் இதனால் குறைவடைகிறது. ‘ஹொக்ஸ்பில் ஆமை’ கடல் பஞ்சுகளை உண்பதன் மூலம் பவளப்பாறை இனங்களுக்கு பயன் தருகிறது. இவ்வாறு ஆமைகள் கடல் பஞ்சுகளை உட்கொள்வதால் கடல் பஞ்சுகளின் ஆதிக்கம் குறைந்து பவளப்பாறைகள் வாழ்விடம் அதிகரிக்கும்.

பச்சை ஆமைகள் கடல் பாசிகளை உட்கொள்பவை. கடல் பாசிகள் கடலின் மேற்பரப்பில் படர்ந்து வாழ்பவை. கடல் பாசிகளின் அடர்த்தியைப் பொறுத்து சூரிய ஒளி ஊடுருவும் அளவு வேறுபடும். கடல் பாசிகள் அடர்த்தி யாகப் படர்ந்து இருந்தால் அடிமட்ட வாழ்விகளுக்கும் தன்னூட்ட நுண்ணு யிரிகளுக்கும் கிடைக்கவேண்டிய சூரிய ஒளி 3 சதவிகிதம் வரை குறைந்து அவற்றின் வளர்ச்சி பாதிப்படையும். பச்சை ஆமைகள் கடல் பாசிகளை உட்கொள்வதால் கடல் பாசிகளின் அடர்த்தி குறைந்து தன்னூட்ட நுண்ணு யிரிகளின் வளர்ச்சிக்குத் தேவையான அளவு சூரிய ஒளி கிடைக்கும்.

‘லொகர்ஹெட்’ ஆமைகள் தங்கள் உணவைத் தேடி தரையில் மேய்கின்றன. இந்த ஆமைகள் கடல் முள்ளெலி போன்றவற்றை உண்கின்றன. உணவு தேடுவதின் மூலம் வண்டல் மண்ணை துடைத்து தரையில் ஊட்டச் சத்து சுழற்சியை ஏற்படுத்துகிறது. இவ்வாறு தீவனம் தேட தரையை மேய்வதால் அடிமட்டத்தில் ஊட்டச்சத்து சுழற்சி இயற்கை முறையில் நிகழ்வதைவிட வேகமாக நிகழும். மேலும், கடல் அடிமட்ட உயிரினங்களுக்கும் கடல்தரைக்கும் மிகவும் உதவியாக இருக்கிறது. கடற்கரையில் முட்டை யிடுவதால் அப்பகுதியில் உள்ள மணல் பரப்புகளில் தாது உப்புகள் மற்றும் இதர சத்துகள் அதிகமாகக் காணப்படு கின்றன.

‘எபிபயான்ட்ஸ்’ என்று அழைக்கப் படும் சிறிய உயிரினங்கள் ஆமை ஓடு களில் ஒட்டிக்கொண்டு வாழும். ‘லாகர்ஹெட்’ ஆமைகள் தன் ஓடு வழியாக ‘எபிபயான்ட்ஸ்’ உயிரினங் களுக்கு இருப்பிடத்தை அளிக்கிறது. ‘கொலம்பஸ்’ வகை நண்டுகள் அந்த எபிபயான்ட்ஸ்களை உண்ணும். ‘ஒலிவ் ரிட்லிஸ்’ வகை ஆமைகளின் ஓடுகள் கடல் வழி செல்லும் பறவைகளின் ஒய்விடமாகத் திகழ்கின்றன. சிறிய வகை மீன்கள் ஆமையின் பின் மறைந்து வேட்டை மீன்களிடமிருந்து தப்பிச் செல்கின்றன.

ஆசிய கண்டத்தில் ஆமை ஓடுகள் பெட்டி, சீப்பு, தூரிகை, கைப்பிடி, காதணிகள், நகைகள் செய்வதற்கு பயன்படுவதால் மக்கள் அதை வேட்டையாடி வருகின்றனர். இழுவலை யில் எதிர்பாராத விதமாகச் சிக்கிக் கொள்வதாலும் ஆமை இனங்கள் அழிந்துவருகின்றன. எண்ணெய்க் கசிவு போன்ற நிகழ்வுகளும் ஆமை அழிவுக்கு ஒரு காரணம். ஹகிரீன் சீ டர்டில்’, ‘ஒலிவ் ரிட்லிஸ்’ ஹலாகர்ஹெட்’ போன்ற ஆமைகள் உணவுக்காகவும் வேட்டையாடப்படுகின்றன. எனவே, இதைத் தடுக்க பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

‘அழிந்து வரும் இனங்களுக்கான சட்டம்” (Endangered species act-1973) (அமெரிக்கா) இச்சட்டம் லாகர்ஹெட், ஹொக்ஸ்பில் வேட்டைக்கு எதிரானவை. ‘ஆமை பாதுகாப்பு மற்றும் நிவாரண சட்டம்” கோஸ்டா ரிக்கா (2002), ‘அமெரிக்கா ஆமை பாதுகாப்பு சட்டம் 2008”, (பனாமா), ‘அழிவின் விழிம்பில் உள்ள உயிரினங்கள் வணிகத் தடைச் சட்டம்” போன்ற சட்டங்கள் உலகளவில் ஆமைகளைப் பாதுகாத்து வருகின்றன. ஆமைகள், சுற்றுச்சூழல் பராமரிப்பில் பெரிய பங்கு அளிப்பவை. கடல்தரையைச் சுத்தமாக்குதல், பவளப்பாறைகளைப் பாதுகாத்தல், மற்ற உயிரினங்களுக்கு இருப்பிடம் அளித்தல், சூழ்நிலை மண்டலத்துக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய அதிகப்படியான சொறி மீன்கள் எண்ணிக்கை குறைத்தல், கடல்பாசிகளை மேய்தல், ஊட்டச்சத்து சுழற்சிக்கு உதவுதல், எபிபயான்ட்ஸ்-உயிரினங்களுக்கு உணவு அளித்தல், நண்டுகளுக்கு உணவு அளித்தல், கடல் பறவைகளுக்கு ஓய்விடம் தருதல் எனப் பல உதவிகர செயல்களைச் செய்து வருகின்றன. இருந்தாலும் மனிதர்கள் தங்களின் மருத்துவ, வணிக சுய லாபத்துக்காக சட்ட விரோதமாக வேட்டையாடுகின்றனர். தற்போது 40 வீதம் ஆமை வகைகள் அழியும் நிலையில் உள்ளன. அரசு இயற்றியுள்ள சட்டங்களைக் கடைப்பிடித்தால் ஆமை இனத்தையும் கடல் வளத்தையும் பாதுகாக்க முடியும்.



# பொ - பொ பவனி பொல்காவலைக்குச் சொன்னதென்ன?

**கலாநிதி அமீரலி,**
**மேர்டொக் பல்கலைக்கழகம், மேற்கு அவுஸ்திரேலியா**

**பொ**த்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை (பொ-பொ) நடந்து முடிந்த நடைபவனி இதற்கு முன்னர் நடைபெற்ற பாதை யாத்திரைகளைவிடவும் பல அம்சங்களில் வேறுபட்டதொன்று. முதலாவதாக, 1960களில் இடம்பெற்ற தமிழ் அரசு கட்சியினரின் பாதயாத்திரைகளும், ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் தலதாமாளிகை நோக்கிய பாதயாத்திரையும் அரசியல் கட்சிகளாலும் அவற்றின் தலைவர்களாலும் ஏற்பாடு செய்யப்பட்டு அக்கட்சிகளின் ஆதரவாளர்களால் முன்னெடுக்கப்பட்டவை. அத்துடன் அந்த யாத்திரைகள் கட்சிகளின் கொள்கைகளையும் வரப்போகும் தேர்தல்களையும் குறிவைத்தே நடத்தப்பட்டவை. அதற்கு மாறாக, பொ-பொ நடைபவனி தன்னிச்சையாக சாதாரண பிரஜைகளால் எந்தவொரு அரசியல் கட்சியோடும் தொடர்பில்லாது நடைபெற்றதொன்று.

இரண்டாவதாக, இந்த நடைபவனியில் முதல்முறையாக சிறுபான்மை இனங்கள் இரண்டும், அதாவது தமிழரும் முஸ்லிம்களும் பங்குகொண்டமை சுதந்திர இலங்கையின் அரசியல் வரலாற்றிலே ஒரு திருப்புமுனை என்று கருதக்கூடிய அளவுக்கு முக்கியத்துவம் பெறுகின்றது. மூன்றாவதாக, மன்னாரிலே அங்குள்ள முஸ்லிம்கள் கிழக்கிலங்கைத் தமிழ்த் தலைவரொருவருக்குக் காட்டிய கரகோஷ வரவேற்பும் அணிவித்த புகழ்மாலைகளும் முஸ்லிம்களின் பிரச்னைகள் தீர்வதற்காகப் போராடும் எந்தத் தலைவனுக்குப் பின்னாலும் தாங்கள் செல்லத் தயார் என்பதை எடுத்துக்காட்டி அதே திருப்புமுனையை மேலும் உறுதிப்படுத்திற்று. நான்காவதாக, இப்பவனியில் எழுந்த கோஷங்கள் அரசியல் கொள்கைகளின் கோஷங்களல்ல, சிறுபான்மை இனங்கள் அன்றாட வாழ்வில் எதிர்நோக்கும் பிரச்சினைகளதும் அடைகின்ற ஏமாற்றங்களினதும் அதனாலெழுந்த மனவேக்காடு களினதும் எதிரொலிகளே. இறுதியாக, இந்த நடை பவனி ஆட்சியாளர்கள் போட்ட தடைகளெல்லாவற்றையும் உதாசீனம் செய்து எது நடந்தாலும் பல வாயில்லை என்ற துணிச்சலுடன் எந்தவோர் ஆயுதத்தையும் கையேந்தாமல் நடைபெற்று வெற்றியடைந்த தொன்று.

இவ்வாறான ஒரு தனித்துவத்தை ஈட்டிக்கொண்ட பொ-பொ நடைபவனி பொல்காவலை அடங்கிய அனைத்து நகர்களிலும் கிராமங்களிலும் வாழும் பெரும்பான்மை இனத்தவர்க்கும் அவர்களின் தலைமைத்துவங்களுக்கும் சொன்ன செய்திகளும் புகட்டிய பாடங்களும் பல.

முதலாவதாக, தன்னிச்சையாக நடைபெற்ற இந்தப் பவனி சிறுபான்மை இனங்களுக்கு இந்த ஓர் உபாயத்தைத் தவிர உலகத்தோரின் கவனத்தை தங்கள் பிரச்சினைகள்பால் ஈர்ப்பதற்கு வேறு வழி இல்லை என்பதைத் தெளிவாக்கியுள்ளது. விரைவில் ஜெனிவாவில் நடைபெறப்போகும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபைக்கும் இப்பவனியின் செய்திகள் எட்டி இருக்கும் எனத்துணிந்து கூறலாம். இந்தப்பவனி பெரும்பான்மை இனத்துக்கெதிராக நடைபெற்ற ஒன்றல்ல. அவர்களின் ஆதரவால் தெரிவுசெய்யப்பட்டு ஆட்சியில் அமர்ந்திருக்கும் தலைவர்களின் செயற்பாடுகளுக்கும் அவற்றை எதிர்த்துப்போராடும் துணிச்சலும் வியூகமும் அற்ற எதிரணித் தலைமைகளுக்கும் எதிராக நடைபெற்ற ஒரு பவனி. சாதுவான ஒரு வீட்டுப் பூனையைக்கூட துரத்திக்கொண்டுபோய் வீட்டு மூலைக்குள் தள்ளிவிட்டால் அது தப்பி ஓடுவதற்காக துரத்தியவர்மேல் பாய்வதைத் தவிர வேறு வழி இல்லை என்பதற்கொப்ப ஆட்சியாளர்களின் அநீதியான எடுபிடிகளுக்குள் இனியும் சிக்கித் தவிக்காமல் தமது தலைவர்களின்மேலும் நம்பிக்கை இழந்து வேறுவழியின்றி எடுக்கப்பட்ட ஒரு விடுதலை முயற்சியே அது. இதன்மூலம் பெரும்பான்மை மக்கள் தங்களின் கண்களைத் திறந்து அவர்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர்களின் அநீதியான ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்தெழுவார்கள் என்ற ஒரு நோக்கமும் இப்பவனி சொன்ன செய்திகளுக்குள் அடங்கியுள்ளது எனலாம்.

பெரும்பான்மை இனத்துக்கு இன்னுமொரு பாடத்தையும் இப்பவனியின் வெற்றி புகட்டியுள்ளது. அதாவது ஆட்சியினர் போட்ட அத்தனை தடை உத்தரவுகளையும் மீறி, பொலிஸ் அதிகாரிகள், இராணுவப்படையினர் ஆகியோரின் அச்சுறுத்தல் களையும் உதறித்தள்ளி, நடைபெற்ற பவனி மக்களின் சக்தி ஒருமித்துத் திரளும்போது பொலிஸ் படையின் தடிகளும் துப்பாக்கிகளும் இராணுவத்தினரின் பீரங்கிகளும் செயல் இழந்துபோகும் என்ற உண்மையை நன்றாக உணர்த்திற்று.

இந்தப்பவனியின் வெற்றியினால் பொறுமை இழந்த ஓர் அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர் தான்மட்டும் அன்று சீருடையோடு நின்றிருந்தால் நடந்தவர்களின் கால்களை உடைத்திருப்பேன் என்று கர்ஜித்தார். உண்மையிலேயே அவருக்குச் சீருடைகொடுத்து அவ்வாறான ஒரு சனத்திரள்முன் விட்டுப்பார்த்தால் தெரியும் அவர் எப்படிக் கோழையாக மாறுவார் என்பது. அவரின் உளவியல் அறிவை என்னென்று சொல்வதோ?

மேலுமொரு பாடம் என்னவெனில் பெரும்பான்மைத் தலைமைத்துவத்தின் இனங்களைப் பிரித்தாளும் தந்திரம் இனியும் பலிக்காது என்பதே. தமிழர்களையும் முஸ்லிம்களையும் இணையவிடாது அதற்கான தந்திரங்களைக் கையாண்டே இதுவரை காலமும் ஆண்டுவந்தனர். அந்த ஆட்சியின் சலுகைகளில் மயங்கி முஸ்லிம்களின் தலைமைத்துவமும் ஆட்சியாளர்களின் பின்னாலேயே சென்று அவர்களுக்குத் துதிபாடினர். இன்றோ பேராதிக்கவாதிகள் ஆட்சியைப் பிடித்துள்ள நிலையில் முஸ்லிம்களின் ஆதரவும் தமக்கு இனித் தேவையில்லை என்று கூறிக்கொண்டு இரு சிறுபான்மை இனங்களையும் ஒருங்கே நசுக்கத் தொடங்கியுள்ளனர்.

எனினும் முஸ்லிம் தலைமைத்துவமோ பேராதிகிக்கவாதிகளின் மனம் விரைவில் மாறி பழைய நிலைக்குத் திரும்புமெனக் கனவு காண்கின்றது. இதனாலேதான் எந்த ஒரு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினனும் இந்தப் பவனியில் கலந்துகொள்ளவில்லை. ஆனால் சாதாரண முஸ்லிம்களோ உண்மை நிலையை உணர்ந்தவர்களாய், உயிரோட்டமுள்ள பங்காளிகளாய் இந்தப் பவனியில் கலந்துகொண்டு தமக்கும் தமது தலைவர்களுக்குமுள்ள இடைவெளியை அம்பலப்படுத்தியுள்ளனர். இது அனைத்து இனங்களினதும் ஒற்றுமையின் அவசியத்தைப் பெரும்பான்மை இனத்துக்குப் புகட்டுகின்ற ஒரு பாடம். பெரும்பான்மை இனத்தவர்க்கு உண்மையிலேயே தேசப்பற்றிருந்தால் சர்வ இனங்களும் ஒன்றுபடாமல் நாடு செழிப்படையாது என்பதை உணரவேண்டும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை இன்றேல் அனைவரும் தாழ்வு.

இந்த உண்மையை பெரும்பான்மை இனத்தவர் புரிந்துவிட்டால் அடுத்த நடைபவனி மூவினங்களையும் உள்ளடக்கியதாய் அமையும் என்பதில் சந்தேகமே இல்லை.

இலங்கையர் என்ற உணர்வை எல்லா மக்களிடையேயும் வளர்க்கவும் அந்த உணர்வையே முதலாக முடக்கி சரிந்து வரும் பொருளாதாரத்தை யாவரும் ஒன்று சேர்ந்து கட்டியெழுப்பவும் முன்னிலையில் நின்று வழிகாட்டவேண்டிய பெரும்பான்மைச் சமூகம் தூங்கிக்கொண்டிருக்க சிறுபான்மை மக்கள் வீதியில் இறங்கியுள்ளனர். இனியாவது பெரும்பான்மையினர் வீதிக்கு வந்து தேசரீதியான ஒரு பிரளயத்தை ஆரம்பிக்கக்கூடாதா?

இதுவரை காலமும் சிறுபான்மையோரின் வளங்களைப் பிடுங்கிப் பெரும்பான்மையினருக்கு வழங்கி அதனால் பெரும்பான்மையினரின் ஆதரைவைப்பெற்று ஆட்சியை கைப்பற்றிக் கொண்டிருந்தவர்கள் இப்போது சிறுபான்மையினர் யாவரையுமே அந்நியர் என்று பட்டம் சூட்டி அவர்களே நாட்டின் பிரச்சினைகளுக்கெல்லாம் காரணம் என்ற ஒரு புதுக்கதையை வளர்க்கின்றனர். இதன் இரகசியம் என்னவெனில் அரசினர்பால் இப்போது வளர்ந்துவரும் பெரும்பான்மை மக்களின் வெறுப்பையும் சீற்றத்தையும் சிறுபான்மை இனங்களின்மேல் திருப்பிவிட்டு மேலும் ஒரு ஜூலை 1983 அத்தியாயத்தை ஆரம்பிப்பதே. இதற்குப் பெரும்பான்மை இனம் பலியாகாமல் அவர்களுக்கு ஞானோபதேசம் செய்வதாக அமைந்தது பொ-பொ நடைபவனி. இதனை பொல்காவலை உணருமா?

**"பெரும்பான்மை இனத்துக்கு இன்னுமொரு பாடத்தையும் இப்பவனியின் வெற்றி புகட்டியுள்ளது. அதாவது ஆட்சியினர் போட்ட அத்தனை தடை உத்தரவுகளையும் மீறி, பொலிஸ் அதிகாரிகள், இராணுவப் படையினர் ஆகியோரின் அச்சுறுத் தல் களையும் உதறித் தள்ளி, நடைபெற்ற பவனி மக்களின் சக்தி ஒருமித்துத் திரளும் போது பொலிஸ் படையின் தடிகளும் துப்பாக் கிகளும் இராணுவத்தினரின் பீரங்கிகளும் செயல் இழந்துபோகும் என்ற உண்மையை நன்றாக உணர்த்திற்று."**

# சீனா இராணுவ குவிப்பை இலங்கையில் செய்யவில்லை

## இந்தியா அச்சப்பட தேவையில்லை என்கிறார் அமைச்சர் சரத் வீரசேகர



கொழும்பு,பெப்.22

**இலங்கையில் சீனா அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கின்றதே தவிர, இராணுவக் குவிப்பை செய்யவில்லை. எனவே, இந்தியா தேசிய பாதுகாப்பை முன்னிலைப்படுத்தி அச்சப் படத் தேவையில்லை என்று பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரகேசர தெரி வித்துள்ளார்.**

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கேள்வி:- அரசியல் ரீதியில் சீனாவின் தலையீடுகள் உள்ள காரணத்தால் இந்தியாவை ஓரங்கட்டுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றதா?

பதில்:- அவ்வாறு எந்த வொரு நாட்டினதும் நேரடி அரசியல் தலையீடுகள் எமக்கில்லை, சீனாவுடன் நாம் நல்லதொரு நட்புறவில் உள்ளோம் என்பதற்காக இந்தியாவுடன் நட்புறவை நாம் முறித் துக் கொள்ளவில்லை. அவர்களுடனும் வர்த்தக, கலாசார ரீதியிலான உறவு கையாளப்படுகின்றது. ஆனால், இந்தியா இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிட முயற்சிகள் எடுத்தால் அதுவே உறவை முறிக்கவும் காரணமாக அமைந்துவிடும். அது மட்டுமல்ல இலங்கை - இந்திய உறவு 13 ஆம் திருத்தத்தில் தங்கியிருக்கவில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் நாட்டுக்கு உகந்த, இலங்கையால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேலைத்திட்டங்களே முன்னெடுக்கப்பட முடியும்.

கேள்வி:- வடக்கில் மின்சக்தி அபிவிருத்தித் திட்டத்தை சீனாவுக்கு கொடுத்தமை இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு பிரச்னையாகும் என்று கூறப்படுகின்றதே?

பதில்:- வெறுமனே தேசிய பாதுகாப்பை கருத்தில் கொண்டு நாட்டின் அபிவிருத்தியை கைவிட முடியாது. நாட்டுக்கு அபிவிருத்தி அவசியமானது. பொருளாதார ரீதியில் வளர்ச்சியடைய வேண்டும் என்றால் இவ்வாறான தீர்மானங்களை நாம் முன்னெடுத்தாக வேண்டும். இலங்கையில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மட்டுமே சீனா முன்னெடுக்கின்றது. மாறாக அவர்களின் இராணுவம் இங்கு குவிக்கப்படவில்லை. இலங்கையின் கடல் எல்லை பாதுகாப்பு எப்போதுமே இலங்கை வசமே இருக்கும். அம்பாந்தோட்டையாக இருந்தாலும், யாழ்ப்பாணமாக இருந்தாலும் கடல் எல்லையை இலங்கைக் கடற்படையே பாதுகாக்கும். இதில் இந்தியா அச்சமடைய வேண்டிய எந்தவித அவசியமும் இல்லை. சீனாவால் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எதுவும் இல்லை- என்றார். (எ)



# கஞ்சா திரவம் அடைக்கப்பட்ட ஆறு போத்தல்கள் பறிமுதல்

கொழும்பு,பெப்.22

பெலவத்த பகுதியில் கஞ்சா திரவம் அடைக்கப்பட்ட ஆறு திரவ போத்தல்களுடன் நேற்று அதிகாலை சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டார்.

இவரிடமிருந்து மீட்கப்பட்ட கஞ்சா திரவத்தின் பெறுமதி 25 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# 291 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பினர்

கொழும்பு,பெப்.22

தொழில்வாய்ப்புக்காக ஐக்கிய அரபு எமிரேட்ஸூக்கு சென்று பல்வேறு துன்புறுத்தல்கள் மற்றும் இலங்கைக்குத் திரும்ப முடியாது பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளான மேலும் 291 இலங்கையர்கள் நேற்று அதிகாலை நாடு திரும்பினர்.

இலங்கை அரசாங்கத்தின் திருப்பி அனுப்பும் விஷேட திட்டத்தின் கீழ் இவர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதன்படி 291 பேரும் நேற்று அதிகாலை 2.55 மணிக்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸின் டுபாயிலிருந்து யு.எல் -1510 என்ற இலங்கை எயர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான விமானத்தின் மூலம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த இவர்கள் இராணுவத்தினரால் தனிமைப்படுத்தல் நடவடிக்கைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் வீட்டுப்பணிப்பெண்களாக எமிரேட்ஸ் சென்றிருந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சிறைச்சாலைகளிலிருந்து மேலும் 16 தொற்றாளர்கள்

கொழும்பு,பெப்.22

சிறைச்சாலைகளிலிருந்து மேலும் 16 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இவ்வாறு அடையாளம்காணப்பட்ட அனைத்து கொரோனா நோயாளர்களும் பெண் கைதிகள் என சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்சமயம் நாடு முழுவதும் உள்ள சிறைச்சாலைகளில் பதிவான கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 4,747 ஆக உயர்வடைந்துள்ளது.

அதிகளவாக வெலிக்கடை சிறையில் 907 பேரும், மகஸின் சிறையில் 878 பேரும், மஹர சிறையில் 824 பேரும், கொழும்பு விளக்கமறியல் சிறையில் 445 பேரும், நீர்கொழும்பு சிறையில் 368 பேரும் கொரோனா தொற்றுக்குள்ளாகினர்.

சிறைச்சாலைகளில் இனங் காணப்பட்ட கொரோனா நோயாளர்களில் 4,477 கைதிகளும், 136 அதிகாரிகளும் குணமடைந்ததாகவும், மேலும் 99 கைதிகளும், 22 அதிகாரிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (எ)

## சஹ்ரான் போதனை: 15 பெண்கள் பங்கேற்பு

கொழும்பு,பெப்.22

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹாசிம் நடத்திய தாக்குதல் குறித்த போதனை நடவடிக்கையில் தான் உட்பட 15 பெண்கள் பங்கேற்றனர் என யுவதியொருவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இவர்களில் ஐந்து பேர் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி சாய்ந்தமருது தாக்குதலில் உயிரிழந்தனர். மூன்று பேர் விளக்கமறியலில் உள்ளனர். தான் உட்பட 7 பேர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் தடுப்புக்காவலில் உள்ளதாகவும் அவர் கூறினார் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

அடிப்படைவாதம் குறித்த சஹ்ரானின் போதனைகளில் பங்கேற்றார் என்ற குற்றச்சாட்டில் மாவனெல்லை பகுதியைச் சேர்ந்த 24 வயது முகமது இப்ராஹிம் சைதா என்ற யுவதியை பயங்கரவாதத் தடுப்பு புலனாய்வுப் பிரிவினர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போதே இந்த விடயங்கள் தெரிய வந்ததாகவும் பொலிஸார் கூறினர். (எ)

# சுகாதார வழிகாட்டல்களை மீறிய 3,202 பேர் கைதாகினர்

கொழும்பு,பெப்.22

முகக்கவசம் அணியத்தவறிய மற்றும் சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்டுள்ள கொரோனா தடுப்பு வழிகாட்டல்களை பின்பற்றத்தவறிய குற்றச்சாட்டில் நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரப் பகுதியில் 12 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை, மேற்படி குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் 3,202 பேர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் கூறினர். சுகாதார வழிகாட்டல்களை மீறுவோரை கைதுசெய்வதற்கான நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (எ)




# 3,02857 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது

கொழும்பு,பெப்.22

நாட்டில் நேற்று முன்தினம் மட்டும் 39 ஆயிரத்து 78 பேர், ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராஜெனேகா கொவிஷீல்ட் தடுப்பூசி மருந்தைப் பெற்றனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. இதன்படி, இதுவரை 3 இலட்சத்து 2857 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசி இயக்கம் கடந்த ஜனவரி 29 ஆம் திகதி ஆரம்பமானது. (எ)

# தமிழர் கையில் ஆட்சி அதிகாரம்

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வலியுறுத்து



கொழும்பு,பெப்.22

**தமிழர்கள் தமது கௌரவத்தை, சமத்துவத்தை, நீதியைப் பாதுகாத்துக்கொள்வதற்கு ஆட்சி அதிகாரம் அவர்களின் கைகளிலேயே இருக்கவேண்டும். ஆகவே எமது சுயநிர்ணய உரிமை மதிக்கப்பட வேண்டும் என்று புதிய அரசமைப்பு உருவாக்கக்குழுவிடம் வலியுறுத்தியிருப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உத்தேச புதிய அரசமைப்பு உருவாக்கக்குழுவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் தமது யோசனைகளைக் கையளித்தனர்.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்:

எமது உள்ளக சுயநிர்ணய உரிமை மதிக்கப்பட வேண்டும். தமிழ் மக்கள் தமது கௌரவத்தையும், சமத்துவத்தையும், நீதியையும் பாதுகாத்துக் கொள்வதற்கு ஆட்சி அதிகாரம் அவர்களின் கைகளில் இருக்கவேண்டும். இதனை புதிய அரசமைப்பு உருவாக்கக் குழுவிடம் மிகவும் உறுதியாக வலியுறுத்தியிருக்கின்றோம்.

இந்தப் பிரச்னை பல வருட காலமாகத் தொடர்ந்து வருகின்றது. அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், இப்பிரச்னைக்குத் தீர்வு வழங்குவதற்குப் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் தமிழ் மக்களுக்கு நியாயமானதும், அர்த்தமுள்ளதுமான அதிகாரப் பரவலாக்கமொன்று வழங்கப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பில் அரசமைப்பு உருவாக்கக் குழுவிடம் எடுத்துரைத்தோம்.

புதிய அரசமைப்பு உருவாக்க நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம்.

எனினும், பெரும்பான்மையினத்தவரின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டு, தமிழ் மக்களுக்கும் சமளவான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்- என்றார். (எ)



## துப்பாக்கிகள், கூரியஆயுதங்களுடன் மினுவாங்கொடையில் ஒருவர் கைது

கொழும்பு,பெப்.22

மினுவாங்கொடை பகுதியில் துப்பாக்கி மற்றும் ஆயுதங்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மினுவாங்கொடை பொலிஸ் நிலையத்துக்கு நேற்று முன்தினம் மாலை கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் தலைமையில், பொலிஸ் குழுவொன்று விஷேட சுற்றிவளைப்பில் ஈடுபட்டது.

இதன்போது துப்பாக்கி மற்றும் கூறிய ஆயுதங்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மினுவாங்கொடை - பத்தட்டுவன பகுதியைச் சேர்ந்த 38 வயது நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இவரிடமிருந்து குழல் 12 ரக துப்பாக்கி ஒன்றும் அதன் தோட்டாக்கள் 16 மற்றும் 9 மில்லி மீற்றர்ரக துப்பாக்கி தோட்டாக்கள் 12 கைப்பற்றப்பட்டுள்ளதுடன் ,3 வாள்கள், 4 கத்திகளும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர் இந்த ஆயுதங்களை எவ்வாறு பெற்றுக்கொண்டார் என்பது தொடர்பிலும், இவற்றை ஏதேனும் குற்றச் செயல்களுக்கு பயன்படுத்தியுள்ளாரா? என்பது தொடர்பிலும் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (எ)

## பாக். பிரதமரின் பாராளுமன்ற உரை இரத்து நாட்டுக்கு பாதக விளைவுகளை ஏற்படுத்தும்

### பிமல் ரத்நாயக்க எச்சரிக்கை



கொழும்பு,பெப்.22

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானின் பாராளுமன்ற உரை இரத்துச்செய்யப்பட்டமை இராஜதந்திர ரீதியில் நாட்டுக்கு பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டியிருக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, இராஜதந்திர தவறுகளை இழைப்பதில் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் நன்கு தேர்ச்சி பெற்றிருக்கிறது என்றும் சாடினார்.

இதுதொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே பிமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அந்தப் பதவில் மேலும் கூறியிருப்பதாவது:

இலங்கை பாராளுமன்றத்தில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் உரையாற்றவிருந்த நிலையில், அது இரத்துச்செய்யப்பட்டுள்ளது. இது நாட்டுக்கு பாதிப்புக்களை ஏற்படுத்தும். இலங்கையின் நீண்டகால நட்பு நாடாக பாகிஸ்தான் இருந்துவருகின்றது. மிகவும் நம்பகத்தன்மை வாய்ந்த சர்வதேசத் தொடர்புகள் என்பவை இராஜதந்திர ரீதியில் மிகவும் மதிப்பு வாய்ந்த சொத்துக்களாகும். அவற்றை ஆட்சியாளர்கள் சீர்குலைக்கக் கூடாது. எனினும் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் இராஜதந்திர தவறுகளை இழைப்பதில் நன்கு தேர்ச்சி பெற்றிருக்கின்றது- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)



## கட்டுநாயக்காவில் நேற்றுவரை 1,500 பேருக்கு தொற்று தடுப்பூசி

கொழும்பு,பெப்.22

கட்டுநாயக்கா பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் உட்பட சுமார் 1,500 பேருக்கு இதுவரை கொரோனா

தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என விமான நிலைய அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

இதன்படி விமான நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ள இராணுவத்தினர், விமானப்படையினர், பொலிஸார், குற்றப் புலனாய்வுத்துறையினர், குடிவரவு மற்றும் குடியகல்வு துறையினர், சுங்கப் பிரிவினர், சுத்திகரிப்பாளர்கள், ஊழியர்கள் மற்றும் வர்த்தக மாலில் உள்ளவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தடுப்பூசி செயல்முறை கடந்த 17 ஆம் திகதி கட்டுநாயக்கா விமான நிலைய வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. மீதமுள்ள ஊழியர்கள் மற்றும்

தடுப்பூசி செலுத்தப்படாத அதிகாரிகளுக்கு எதிர்வரும் நாள்களில் தடுப்பூசி செலுத்தப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

## ஈஸ்டர் தாக்குதல் அறிக்கையை பகிரங்கப்படுத்தக்கோரி பேராயர் தலைமையில் தேவாலயம் முன் ஆர்ப்பாட்டம்





நீர்கொழும்பு,பெப்.22

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையை பகிரங்கப்படுத்தக்கோரி கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உட்பட பலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம், தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்ற நீர்கொழும்பு கட்டுவாப்பிட்டி சென். செபஸ்ரியார் தேவாலயத்துக்கு முன்பு இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த பேராயர்:

ஈஸ்டர் தாக்குதல் குறித்த ஆணைக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை மாற்றுவதற்காகவா? ஜனாதிபதி புதிய குழுவை நியமித்துள்ளார்.

ஆணைக்குழுவின் அறிக்கையொன்றை நான் கோரியுள்ளேன். அந்த ஆணைக்குழுவின் முழு அறிக்கையையும் உடன் பகிரங்கப்படுத்த வேண்டும்.

அத்துடன் இந்த அறிக்கையில் இருப்பதை மறைக்க வேண்டிய தேவையில்லை. அவற்றை வெளிப்படுத்த வேண்டும்.

கடந்த ஒன்றரை வருடங்களாக இந்தத் தாக்குதல் தொடர்பில் ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை தயாரித்திருந்தது.

அரசாங்கம் எந்தவித அச்சமுமின்றி மக்களுக்கு அந்த ஆணைக்குழுவின் அறிக்கையைப் பகிரங்கப்படுத்த வேண்டும்.



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த ஆணைக்குழுவின் அறிக்கையை ஆராய மீண்டும் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவில் எமக்கு நம்பிக்கையில்லை- என்றார். (எ)



# ரஷ்யாவில் பறவை காய்ச்சல் வைரஸ் முதல் முறையாக மனிதரில் தொற்று!

மொஸ்கோ, பெப். 22

உலகை அச்சுறுத்தக் கூடிய அடுத்த வைரஸ் பெரும்பாலும் பறவைப்பண்ணைகளில்இருந்தே வெளிவரும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டு வரும் நிலையில் அதனை நிரூபிக்கின்ற செய்தி ஒன்று ரஷ்யாவில் வெளியாகி இருக்கிறது.

உலகின் பல பகுதிகளில் பறவைகளில் காணப்படுகின்ற AH5N8 எனப்படும்புதிய வைரஸ் முதல் முறையாக பறவைகளில் இருந்து மனிதர்களுக்குத் தொற்றியுள்ளது என்ற தகவலை ரஷ்யா அறிவித்திருக்கிறது.

நாட்டின் தெற்குப் பகுதியில் உள்ள கோழிப்பண்ணை ஒன்றில் இருந்தே ஏழு பேருக்குப் பறவைக் காய்ச்சல் வைரஸ் தொற்றி உள்ளது. அதனை அங்குள்ள நுகர்வோர் நலன் பேணும் சுகாதாரக் காப்பகத்தின் தலைமை அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தி உள்ளார். AH5N8 எனப் பெயரிடப்பட்ட வைரஸின்முதலாவது மனிதத் தொற்றுக்கள் இவை என்பதால் அது குறித்து உலக சுகாதார நிறுவனத்துக்கு(WHO) அறிவிக்கப்பட் டுள்ளதாகவும் அவர் தெரிவித் திருக்கிறார்.

ஏற்கனவே பறவைக் காய்ச்சல் பரவி இருந்த கோழிப் பண்ணை ஒன்றின் பணியாளர்கள் ஏழு பேரே தொற்றுக்கு ஆளாகி உள்ளனர். அவர்கள் அனைவரும் ஆரோக்கியமாக உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த வைரஸ் மனிதர்களிடையே தொடர்ந்து பரவக்கூடிய ஆபத்து உள்ளதா என்பது இன்னமும் அறிவியல் ரீதியாக உறுதிப்படுத் தப்படவில்லை.

பறவைகளில் தொற்றி உயிரிழப்பை ஏற்படுத்தக் கூடிய இத் தகைய வைரஸ் இனங்கள் காலப் போக்கில் வீரியம் பெற்று மனித குலத்தைத் தாக்கலாம் என்று ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

பறவைகளையும் விலங்குகளையும் நெரிசலாக அடைத்துப் பராமரிக்கும் பண்ணைகளில் இருந்து அடுத்த கொரோனா வைரஸ் தோன்றக்கூடும் என்று அவர்கள் நம்புகின்றனர்.

உலகில் இதற்கு முன்னர் பரவிய H5N1 என்ற பறவைக் காய்ச்சல் வைரஸ் மனிதர்களுக்குத் தொற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. பிரான்ஸ் உட்பட பல நாடுகளில் அண்மைக் காலத்தில் கண்டறியப்பட்ட AH5N8 வைரஸ் காரணமாக லட்சக் கணக்கான பறவைகள் கொன்றொழிக் கப்பட்டு வருகின்றன. கோழிகள், வாத்துகள் போன்றன இறைச்சிக்காக வளர்க்கப்படும் பண்ணை களில் பறவைக் காய்ச்சல் தொற்றி உள்ளது.

# நடுவானில் தீ பிடித்த போயிங் விமானம்!

## 20 நிமிடங்கள் உயிருக்கு போராடிய 241 பேர்



வொஷிங்டன், பெப். 22

231 பயணிகள் மற்றும் 10 பணியாளர்களுடன் அமெரிக்காவின் டென்வா - சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ஹொனலுலுவிற்கு சென்று கொண்டிருந்த அமெரிக்காவின் யுனைட்டெட் ஏர் போயிங் 777-200 விமானம் இயந்திரக் கோளாறு காரணமாக தீப்பற்றி எரிந்தவாறு அவசரமாகத் தரையிறங்கியது.

விமானம் புறப்பட்ட உடனேயே இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டது. கடுமையாகப் போராடிய விமானி டென்வர் சர்வதேச விமான நிலையத்தில் விமானத்தை பாதுகாப்பாக தரையியதாக பெடரல் ஏவியேஷன் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

எனினும் விமானம் அவசரமாகத்தரையிறங்கும்போது டென்வர் விமான நிலையம் அருகே உள்ள வீடொன்றின் மீது அதன் இறக்கை மோதியது. இதனால் வீட்டுக்கு சிறிய சேதம் ஏற்பட்டது. அத்துடன், விமானத்தின் சிறிய பாகங்கள் டென்வர் விமான நிலையத்தைச் சூழவுள்ள இடங்களில் காணப்பட்ட புகைப் படங்கள் வெளியாகியுள்ளன.

விமானம் பாதுகாப்பாக தரையிறங்கிய பின்னர் விமானத்தின் சிறிய பாகங்கள் ஆங்காங்கு காணப்பட்ட தகவல் தங்களுக்குக் கிடைத்ததாக பெடரல் ஏவியேஷன் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சனிக்கிழமை புறப்பட்ட சுமார் 20 நிமிடங்களின் பின்னர் விமானம் டென்வர் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது. டென்வர் புறநகர்ப் பகுதிக்கு மேலே பறக்கும்போது விமானத்தின் இயந்திரத்தில் கோளாறு இருப்பது தெரியவந்தது. இதனையடுத்து மதியம் 1.08 மணியளவில் விமானம் தரையிறங்கியது. அவசரமாகத் தரையிறங்கியபோது ஆங்காங்கு விமானத்தின் சிறிய பாகங்கள் வீழ்ந்தன என கொலராடோவின் ப்ரூம்பீல்டில் பொலிஸார் வெளியிட்டுள்ள ஒரு ருவிட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது

டென்வருக்கு அருகே கொமன்ஸ் பார்க் மற்றும் ப்ரூம் பீல்டின் நோர்த்மூர் மற்றும் ரெட்லீப் பகுதிகளில் விமானத்தின் சிறிய பாகங்கள் காணப்பட்டன எனவும் அந்த ருவிட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் டென்வர் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து 25 முதல் 30 கிலோமீற்றர் தொலை வில் உள்ளன.

வெளியாகியுள்ள புகைப்படங்களில் வீடொன்றின் முற்றம், உள்ளூர் பூங்கா, காஸ்ந்து மைதானம் ஆகியவற்றில் விமானத்தின் சிறிய பாகங்கள் காணப்படுகின்றன.

இதேவேளை, விமானம் தரையிறங்கும்போது வெடிப்புச் சந்தங்கள் கேட்டதாக டென்வார் சர்வதேச விமான நிலையம் அருகே உள்ள குடியிருப்பாளர்களிடம் இருந்து தமக்கு முறையிடப்பட்டதாக ப்ரூம்பீல்ட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன் பின் விமானத்தில் சில பாகங்கள் வீழ்ந்திருப்பது குறித்து குடியிருப்பாளர்களிடம் இருந்து தகவல்கள் கிடைத்ததாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

# இராணுவ ஜெட் விழுந்து விபத்து

## அமெரிக்காவில் இருவர் உயிரிழப்பு



வொஷிங்டன், பெப். 22

அமெரிக்காவில் இராணுவ ஜெட் விமானம் விழுந்து விபத்துக்கு உள்ளானதில் இருவர் உயிரிழந்தனர்.

14ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த ரி-38 ரக விமானத்தில் விமானிகள் நேற்று முன்தினம் மாலை பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

மிசிசிப்பியில் உள்ள கொலம்பஸ் விமானத்தளத்திலிருந்து புறப்பட்ட இந்த விமானம் புளோரிடாவின் டல்லாஹஸ்ஸிக்கு செல்வதாக இருந்தது. இந்நிலையில் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக விமானம் கீழே விழுந்து வெடித்துச் சிதறியது. இந்த விபத்தில் விமானத்தில் இருந்த இரு விமானிகள் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது. எனினும் குறித்த இரு விமானிகளின் விவரங்களை விமானப்படை வெளியிடவில்லை.

# மக்களிடம் அச்சத்தை போக்க தடுப்பூசி போட்டுக்கொண்ட அவுஸ்ரேலிய பிரதமர்!

கான்பரா, பெப்.22

அவுஸ்ரேலியாவில் இன்று திங்கட்கிழமை முதல் கொரோனா வைரஸிற்கு எதிரான தடுப்பூசி போடும்பணி ஆரம்பமாகவுள்ளது.

கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்ந்து பின்பற்றப்படுகின்றன. அதேசமயம் தடுப்பூசித்திட்டத்தை தொடங்குவதற்கும் அரசு நடவடிக்கை மேற்கொண்டது.

பைசர் நிறுவனத்தின் தடுப்பூசிக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இதையடுத்து, கொரோனா தடுப்பூசி போடும் பணி இன்று ஆரம்பமாகவுள்ளது.

அதற்கு முன்னோட்டமாகவும், கொரோனா வைரஸ் தடுப்பூசி தொடர்பாக மக்களிடையே நிலவும் அச்ச உணர்வை நீக்கி, நம்பிக்கையூட்டும் வகையிலும், தடுப்பூசி திட்டம் தொடங்குவதற்கு முன்பாக, நேற்று பிரதமர் ஸ்கொட் மொறிசன் தடுப்பூசியின் முதல் டோஸை செலுத்திக்கொண்டார்.



அவுஸ்ரேலியா முழுவதும் இன்று முதல் கொரோனா தடுப்பூசி வழங்கும் பணிகள் அதிகாரபூர்வமாக தொடங்கும் நிலையில், அதுகுறித்து மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் பிரதமர் கலந்துகொண்ட இந்த நிகழ்வு நேரலையாக தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டது.

தடுப்பூசி பாதுகாப்பானது, முக்கியமானது. கொரோனாவை முன்களத்தில் எதிர்த்து நின்று போராடுபவர்களுக்கும் எளிதில் பாதிக்கப்பட கூடியவர்களுக்கும் முதலில் தடுப்பூசி செலுத்த வேண்டியது அவசியம்.' என தெரிவித்தார்.

# பிரான்ஸின் நீஸ், கேன் நகரங்களில் தீவிர தொற்று! மூடிமுடக்க யோசனை!!



பாரிஸ், பெப்.22

தீவிர வைரஸ் பரவல் காரணமாக பிரான்ஸின் நீஸ், கேன் நகரங்களை உள்ளடக்கிய ஆல்ப்ஸ்-மரைடிம்ஸ் (Alpes-Maritimes) பிராந்தியம் பகுதியாக மூடி முடக்கப்படும் ஆபத்தை எதிர்நோக்கி உள்ளது.

நேற்று சனிக்கிழமை அங்கு விஜயம் செய்து நிலைமைகளை மதிப்பீடு செய்த சுகாதார அமைச்சர் ஒலிவியே வேரன், அங்கு பகுதியளவு பொது முடக்கம் ஒன்றை அமுல் செய்யவேண்டிய அவசரம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். மிகக் கடுமையான கட்டுப்பாடுகள் அங்கு அறிவிக்கப்படவுள்ளன.

அவசரமாக அப் பிராந்தியத்துக்கு மேலதிக தடுப்பூசி மருந்தை அனுப்பு வதற்கு அமைச்சர் உத்தரவிட்டிருக்கிறார். உள்ளூர் மட்டத்தில் பொது முடக்கம் ஒன்றை அமுல் செய்யவேண்டிய அளவுக்கு தொற்று நிலைவரம் மோசமாக இருப்பதாக அவர் தெரிவித்தார். பொலிஸ்தலைமையகம் மற் றும் உள்ளூராட்சி பிரதிநிதிகளுடன் கலந்தாலோசித்த பின்னர் புதிய கட்டுப்பாடுகள் அடுத்த 48 மணி நேரத்தினுள் அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

அல்ப்ஸ்-மரைடிம்ஸ் பிராந்தியத்தில் ஒரு லட்சம் குடியிருப்பாளர்களுக்கு 581 பேர் என்ற கணக்கில் வைரஸ் தொற்றுக் காணப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. நாளாந்தம் ஐந்நூறுக்கு மேற்பட்டோர் தொற்றுக்கு ஆளாகின்றனர். அங்குள்ள மருத்துவமனைகளில் அனுமதிகள் 121 வீதமாக உயர்ந்துள்ளன.

நாட்டின் இதர பகுதிகளுடன் ஒப்பிடும் போது நீஸ்(Nice) நகரில் மூன்று மடங்கு அதிகமான தொற்று வீதம் உள்ளது.

பிரான்ஸின் தென்கிழக்குப் பிராந்தியமாகிய அல்ப்ஸ்-மரைடிம்ஸ் அதன் அழகிய கடற்கரைகளால் உலகப் புகழ் பெற்றது.

ஈழநாடு



# சாம் கரன் இல்லை!



இந்தியாவுக்கு எதிராக அகமதாபாத்தில் நடைபெற உள்ள அடுத்த 2 டெஸ்ட் போட்டிகளிலும் இங்கிலாந்து அணியில் சாம் கரன் விளையாடமாட்டார் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இங்கிலாந்திலிருந்து அகமதாபாத்துக்கு வருவதில் சாம் கரனுக்கு பல்வேறு சிக்கல்கள் இருப்பதால், அவர் அடுத்தவரும் இரு டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடமாட்டார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை அணிக்கு எதிரான 2 டெஸ்ட் போட்டிகளிலும் இங்கிலாந்து அணியில் விளையாடிய சாம் கரன், அந்தத் தொடர் முடிந்தவுடன் அவருக்கு ஓய்வு அளிக்கப்பட்டது. திட்டமிடப்பட இந்தியாவுக்கு எதிரான கடைசி இரு டெஸ்ட்போட்டிகளில் சாம் கரன் விளையாட அகமதாபாத் வந்திருக்கவேண்டும்.

அதற்கு ஏற்றார்போல் பேர்ஸ்டோ, மார்க் உட் இருவரும் திட்டமிட்டு அகமதாபாத் வந்து, பயோபபுள் சூழலுக்குள் வந்துவிட்டார்கள். ஆனால், சாம் கரனுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட ஓய்வுக் காலமும் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நீட்டிக்கப்பட்டது. ஆனால் கொரோனா வைரஸ் சூழலில் சாம் கரன் சிக்கியுள்ளதால், அவரால் அடுத்த இரு டெஸ்ட் போட்டிகளிலும் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்த இங்கிலாந்து கிரிக்கெட் வாரியத்தின் தகவல்கள் கூறுகையில் “திட்டமிட்டபடி இந்தியாவுக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் போட்டிக்கு சாம் கரன் வந்திருக்கவேண்டும். ஆனால், பிரிட்டனில் இருந்து அகமதாபாத்துக்கு நேரடியாக எந்த விமானங்களும் இல்லை. தனியாக விமானத்தை அமர்த்தி சாம் கரனை அழைத்துவரும் சூழலும் இல்லை.

மற்ற பயணிகள் வரும் விமானத்தில் சாம் கரன் வந்தாலும் அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுவிடும் என அச்சம் நிலவுகிறது. இந்தியா வந்தபின் அவரை தனிமைப்படுத்துவதிலும், இங்கிலாந்து அணியில் சேர்வதிலும் சிக்கல் இருக்கிறது. ஆதலால், அடுத்து வரும் 2 டெஸ்ட் போட்டிகளில் சாம் கரன் விளையாடுவதற்கு வாய்ப்பில்லை. வரும் 26ஆம் திகதிக்குள் இங்கிலாந்து ஒரு அணியில் வேண்டுமானால் சாம் கரன் இணைந்து கொள்வதற்குத்தான் வாய்ப்புள்ளது” எனத் தெரிவித்தார்.




# இலங்கை கிரிக்கெட்டில் மீண்டும் டொம் மூடி?

இலங்கை அணியின் மிக வெற்றிகரமான கிரிக்கெட் பயிற்சியாளரான தோமஸ் மோசன் மூடி கிரிக்கெட் இயக்குநர் என்ற புதிய பணிக்காக கொழும்புக்கு வருகை தரவுள்ளார்.

அரவிந்த டி சில்வா தலைமையிலான கிரிக்கெட் குழுவால் புதிதாக உருவாக்கப்பட்ட இந்த நிலைப்பாடு இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்துக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தின் அனைத்து கிரிக்கெட் தொடர்பான விடயங்களும் பயிற்சி, உள்நாட்டு போட்டிகள், மேம்பாட்டுக் குழுக்கள், வயதுக் குழுக்கள் மற்றும் மைய ஒப்பந்த வீரர்களுக்கான குறைந்தபட்ச உடற்பயிற்சி தரநிலைகள் போன்ற விவரங்கள் உள்ளிட்டவை கிரிக்கெட் இயக்குநர் உள்ளிட்ட பதவியின் கீழ் இருக்கும்.

இதற்காக இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் முன்னாள் இலங்கை தலைமை பயிற்சியாளரான டொம் மூடியுடன் பேச்சு நடத்தி வருகிறது.




# இந்திய அணி அறிவிப்பு!

இங்கிலாந்து அணிக்கு எதிரான இருபதுக்கு இருபது கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

விராட் கோலி தலைமையிலான இந்திய அணியில், சூர்யகுமார் யாதவ், இஷான் கிஷன், ராகுல் திவே தியா ஆகியோர் முதல் முறையாக இடம் பெற்றுள்ளனர். தமிழக வீரர்களான நடராஜன், வருண் சக்கரவர்த்தி, வாஷிங்டன் சுந்தர் ஆகியோரும் அணியில் இடம் பிடித்துள்ளனர்.

இரு அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு இருபது கிரிக்கெட் தொடர், மார்ச் 12-ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

கொரோனா கட்டுப்பாடுகள் காரணமாக இருபதுக்கு இருபது போட்டிகள் அனைத்தும் அகமதாபாத்திலுள்ள சர்தார் படேல் மைதானத்திலேயே நடைபெறவுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள அணியில்,

விராட் கோலி, ரோஹித் சர்மா, கே.எல்.ராகுல், ஷிகர் தவான், ஸ்ரேயாஸ் ஐயர்,சூர்யகுமார் யாதவ், ஹர்திக், ரிஷப் பந்த், இசான் கிஷான், வை. சாகல், வருண் சக்கரவர்த்தி, அக்சர் பட்டேல்,சுந்தர், டிவாட்டியா, நடராஜன், புவனேஸ்வர் குமார், டீபக் ஷாகர், நவதீப்,சாஅதுல் தகூர் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

# ஜப்பான் வீராங்கனை ஒசாகா 2ஆம் முறை பட்டம் வென்றார்!

மெல்போர்னில் நடந்து வரும் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அவுஸ்திரேலியன் ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் ஜப்பான் வீராங்கனை நவோமி ஒசாகா 2ஆவது முறையாகச் சம்பியன் பட்டம் வென்றார்.

இதற்கு முன் கடந்த 2019ஆம் ஆண்டு அவுஸ்திரேலியன் ஓப்பனில் சம்பியன் பட்டத்தை ஒசாகா வென்றுள்ளார்.

மெல்போர்னில் நேற்று முன் தினம் நடந்த மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் அமெரிக்க வீராங்கனை ஜெனிபர் பிராடியை 6-4, 6-3 என்ற நேர் செற்களில் வீழ்த்தி சம்பியன் பட்டத்தை ஒசாகா கைப்பற்றினார். ஒசாகாவுக்கு ஒட்டுமொத்தமாக 4ஆவது கிராண்ட்ஸ்லம் பட்டம், அவுஸ்திரேலிய ஓபனில் பெறும் 2ஆவது பட்டமாகும்.

ஜப்பானில் பிறந்த ஒசாகா, தனது 3ஆவது வயதிலேயே அமெரிக்காவுக்கு குடும்பத்தோடு குடிபெயர்ந்தார்.

23 வயதான ஒசாகா, கடந்த 2020ஆம் ஆண்டில் ஏ.பி. செய்தி நிறுவனத்தின் சிறந்த தடகள வீராங்கனைக்கான விருதை வென்றார். கடந்த சீசனில் தொடர்ந்து 21 போட்டிகளில் ஒசாகா வென்றுள்ளார். அதில் அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் சம்பியன் பட்டமும் அடங்கும். இதற்கு முன் 2018இல் யு.எஸ் ஓப்பனையும் ஒசாகா வென்றுள்ளார்.

இந்த ஆண்டில் நடந்த முதல் கிராண்ட்ஸ்லம் போட்டியில் ஒசாகா சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். இந்தப் போட்டியில் பங்கேற்கபதற்காக அவுஸ்திரேலியாவுக்கு ஜனவரி மாதமே ஒசாகா வந்துவிட்டார். ஆனால், ஒசாகா பயணித்த விமானத்தில் வந்த ஒருவருக்கு கொரோனா தொற்று இருந்ததால், ஒசாகா பயிற்சியில் ஈடுபடமுடியாமல் 15 நாட்கள் தனிமைப் படுத்தப்பட்டார்.

இந்த தனிமைப்படுத்துதலுக்குப் பின்புதான் ஒசாகா பயிற்சியில் ஈடுபட்டு தற்போது சம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளார்.

தொடக்கத்திலிருந்து தனது இயல்பான, வேகமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஒசாகா முதல் செற்றில் 4 கேம்களை விட்டுக்கொடுத்தார். அடுத்த செட்டிலும் 3 கேம்களை மட்டுமே கொடுத்து செற்றைக்கைப்பற்றினார். இந்த இரு செற்களிலும் 6 வலிமையான ஏஸ்களை வீசி பிராடியை திணறவிட்டார்.





# சனத் ஜெயசூரியவுக்கு கொரோனா தடுப்பூசி

இலங்கை அணியின் முன்னாள் வீரர் சனத் ஜெயசூரியவுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப்பட்டமை குறித்து ஆராய்ந்து வருவதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

சனத் ஜெயசூரியவிற்கு கொரோனா வைரஸ் தடுப்பூசி வழங்கப்பட்டதை காண்பிக்கும் படங்கள் வெளியானதைத் தொடர்ந்து கரிசனைகள் வெளியாகியுள்ளன.

சனத் ஜெயசூரியாவுக்கு எதன் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்பட்டது என வினவப்பட்டபோதே, இந்த விடயம் குறித்து ஆராய்ந்து வருவதாக இராணுவத்தளபதி தெரிவித்துள்ளார்.

அதிகளவு பாதிக்கப்படக்கூடிய பகுதி என தெரிவு செய்யப்பட்ட பகுதியில் சனத் ஜெயசூரிய வாழ்ந்திருந்தால் அவரை அதிகாரிகள் தெரிவு செய்திருக்கலாம் என இராணுவத்தளபதி குறிப்பிட்டுள்ளார்.

முன்னிலைப் பணியாளர்கள், இராணுவத்தினர், பொலிஸார், பொதுமக்களுடன் நெருக்கமான தொடர்பில் இருப்பவர்கள் பாதிக்கப்படக்கூடியவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.



# மக்களை ஏமாற்றாதே

## மஸ்கெலியாவில் நேற்று போராட்டம்

மஸ்கெலியா,பெப்.22

தமக்கான வீட்டுத் திட்டத்தை விரைவில் முழுமைப் படுத்தித் தருமாறு கோரி மஸ்கெலியா, பிரவுன்ஸ்வீக் தோட்டத்தில் குயின்ஸ்லேண்ட் பிரிவிலுள்ள பயனாளிகள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குயின்ஸ்லேண்ட் தோட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கோஷங்களை எழுப்பியவாறு, பதாகைகளை ஏந்திய வண்ணம் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அரசியல் என்பது மக்களுக்கானது, எனவே, எந்தத் தரப்பு ஆட்சிக்கு வந்தாலும் கட்சி பேதங்களுக்கு அப்பால் மக்களுக்கான சேவைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர். (எ)

# யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தை மத்தியிடம் கையளிக்க ஆனல்ட் இணங்கினார்

## மணிவண்ணன் குற்றச்சாட்டு




யாழ்ப்பாணம்,பெப்.22

**யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தை யாழ்.மாநகர சபை முன்னாள் முதல்வர் இ.ஆனல்ட், மத்திய அரசிடம் கையளிக்க உடன்பட்டிருந்தார்.**

**இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் யாழ்ப்பாணம் நகரின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணக் கலாசார மத்திய நிலையத்தை மாநகர சபை முன்னாள் முதல்வர் இமானுவல் ஆனல்ட், மத்திய அரசிடம் அதனை நிர்வகிக்க கையளிப்பதற்கு இணங்கியதால், இதன் கட்டட நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்தும், அதனை திறப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என யாழ். மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் குற்றம்சாட்டியுள்ளார்.**

யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தை பொறுப்பேற்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

அதிலும், குறிப்பாக கலாசார நிலையத்தை இயக்குவதற்கான உத்தியோகத்தர்களை உத்தியோகபூர்வமாகப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றோம்.

நான் மாநகர முதல்வராக பதவியேற்ற காலத்திலிருந்து முதல் பணியாக இந்த விடயத்தை முன்னிறுத்தி செயல்பட்டு வருகின்றேன். எனினும், இந்தக் கட்டடமானது யாழ். மாநகர சபையிடமிருந்து பறிக்கப்படும் நிலை காணப்படுகின்ற நிலையில் அதனை யாழ். மாநகர சபை பொறுப்பேற்று நடத்துவதற்குரிய செயல்பாட்டை நான் முன்னெடுத்துள்ளேன்.

அத்தோடு அங்கே பணியாற்றுவதற்காக 67 உத்தியோகத்தர்களுக்கான நியமனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளேன்.

அத்தோடு அந்தக் கட்டடத்தை நிர்மாணித்த பொறியியலாளர்களிடம் இந்தக் கட்டடத்தை எவ்வாறு கையாள்வது, பராமரிப்பது என்பது தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகளை முன்னெடுத்திருக்கின்றோம்.

வெகுவிரைவில் உத்தியோகபூர்வமாக இந்தக் கட்டடமானது திறப்புவிழா செய்யப்பட்டு யாழ். மாநகர சபையிடம் கையளிக்கப்படவுள்ளது.

அத்தோடு இந்தியத் துணைத் தூதுவரிடம் இந்த விடயம் தொடர்பில் பல விடயங்களைத் தெரியப்படுத்தியுள்ளோம். அவர்களும் இது தொடர்பில் எமக்கு ஒத்தாசை வழங்கி வருகின்றனர்.

மேலும் முன்னைய ஆட்சியாளர் இந்தக் கலாசார மத்திய நிலையத்தை மத்திய அரசாங்கத்துக்கு கையளிப்பதற்கு இணங்கியதே இவ்வளவு காலமும் இந்தக் கட்டடம் திறக்கப்படாமல் இருப்பதற்கு காரணம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இந்த கலாசார மத்திய நிலையமானது யாழ்ப்பாணம் மாநகர சபையின் சொத்து. அது இந்த ஆட்சி மாற்றத்தின் மூலம் காப்பாற்றப்பட்டு நமது சபைக்கு மீண்டும் கையளிக்கப்படவுள்ளது என்பதனை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் எனத் தெரிவித்தார். (எ)

# அரசியல் நோக்கத்தில் ஆதாரமற்ற குற்றச்சாட்டு

## மணிவண்ணனுக்கு ஆனல்ட் பதில்

யாழ்ப்பாணம்,பெப்.22

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியில் யாழ்ப்பாணம் நகரின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணக் கலாசார மத்திய நிலையத்தை மத்திய அரசிடம் கையளிப்பதற்கு இணங்கியதன் காரணமாகவே அந்தக் கட்டடத்தை திறப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என இந்நாள் முதல்வர் வி.மணிவண்ணன் அரசியல் நோக்கத்தில் ஆதாரமற்ற குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார் என முன்னாள் முதல்வர் இ.ஆனல்ட் தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் கலாசார மத்திய நிலையத்தை பொறுப்பேற்பதற்காக நாம் பல முயற்சிகளில் ஈடுபட்டோம்.

கலாசார நிலையத்தை இயக்குவதற்கான உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான அனுமதிக்காக பிரதமரை நேரில் சந்தித்து உரையாடவும், நிர்வாக ரீதியில் அனுமதி கோரியிருந்தோம். அதற்கான அனுமதி கிடைத்து உரையாடவுள்ள விடயங்கள் தொடர்பில் பட்டியல் கோரப்பட்டபோது இந்த விடயமே முதன்மைப்படுத்தப்பட்டு நிகழ்ச்சி நிரலும் தயாரிக்கப்பட்டது.

நான் மாநகர முதல்வராக பதவியிலிருந்த காலத்தில் இதனை திறக்க முயன்றும், கொரோனா தொற்று அச்ச நிலை காரணமாக பணிகள் தடைப்பட்ட காலத்தில் சிலர் இதனை மத்திய அரசின் கீழ் கொண்டு செல்ல முயல்வதாக அறிந்து கூட்டமைப்பின் தலை



வர் இரா.சம்பந்தனுடன், இந்தியத் தூதுவரை கொழும்பில் சந்தித்து கலாசார மத்திய நிலையத்தை உடன் திறக்கவும், இந்தியப் பிரதமர் மோடி, இதனைத் திறந்து வைக்க வேண்டும் என்ற விருப்பத்தையும் தெரிவித்திருந்தோம்.

இந்தக் காலத்தில் இலங்கையில் இருந்து இந்தியா சென்ற அமைச்சர் குழாமில் இருந்த ஓர் அமைச்சரே இதனை மாநகர சபை நிர்வகிக்க மாட்டாது என்பதால் எம்மிடம் கையளியுங்கள் எனக் கோரிக்கை விடுத்தார். இதனை இந்நாள் முதல்வரின் பங்காளிக் கட்சியின் தலைவர் மூலம் உறுதி செய்ய முடியும். ஏனெனில் அவரும் அந்த அமைச்சர் குழாமில் அங்கம் வகித்திருந்தார்.

இந்த விடயங்களை கூட்டமைப்பு சார் மாநகர சபை உறுப்பினர், அப்போதய மாநகர சபையில் பிரஸ்தாபித்தபோதும் கலாசார மண்டபத்தை மத்திய அரசிடம் கையளிக்க முடியாது என சபையிலேயே தெரிவித்திருந்தேன். இந்தக் காலத்தில் சபையில் இருந்திருக்காத இந்நாள் முதல்வர், அரசியல் ஆதாயத்துக்காக ஆதாரமற்ற குற்றச்சாட்டை முன்வைக்கக் கூடாது. இக் கட்டடம் அமைக்கப்படும் காலத்தில் இந்தியா என்றாலே றோ எனக்கூறி ஓடி ஒளித்து, அவர்களிடம் பெறும் உதவியையே மறுத்தவர்கள் இவர்கள்.

இது மட்டுமல்ல மாநகர சபையின் புதிய கட்டடத்துக்கு முதலில் ஆயிரத்து 800 மில்லியன் ரூபா திட்டமிடப்பட்டபோதே 300 மில்லியன் ரூபா சபை நிதியில் வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால், பின்னர் 2 ஆயிரத்து 150 மில்லியன் ரூபா செலவாக அதிகரித்தபோதும், சபையின் எந்தநிதியும் இன்றி அமைப்பதற்கான அனுமதியை பெற்றுக்கொடுத்தோம். இதன் ஆரம்ப நிகழ்வின் செலவுக்கு வெறும் 10 மில்லியன் ரூபா அனுமதி கோரியபோது இந்தக் கட்டடம் அமைக்கப்படமாட்டாது. அதனால், இந்த அனுமதியை வழங்க முடியாது எனக் கூறியவர்கள் இன்றைய ஆட்சியில் உள்ள இரு பங்காளிக் கட்சிகள்தான்.

ஆனால், இந்தக் கட்டடம் வராது விட்டால் எனது சொந்தப்பணத்தில் வழங்கத் தயார் என எமது கட்சி உறுப்பினரும் ஐ.தே.கட்சியின் ஓர் உறுப்பினரும் கூறியதன் பேரிலேயே அது அன்று அனுமதிக்கப்பட்டது. இவை எதுவுமே அறியாது முதல்வராக வந்தபின்பு ஓடிப்போய் அந்தக் கட்டடத்தை பார்த்து வழி நடத்துகின்றனராம். இது தான் அநாகரிக அரசியல்- என்றார். (எ)

# மாகாண சபைகளுக்கு வலுச்சேர்க்க வேண்டும்

## அரசமைப்பு குழுவுக்கு ஈ.பி.டி.பி. பரிந்துரை

கொழும்பு,பெப்.22

மாகாண சபையை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பகிர்வை வலுவாக நடைமுறைப்படுத்தும் வகையில் புதிய அரசமைப்பு அமைய வேண்டும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

புதிய அரசமைப்புக்கான நிபுணர் குழுவிடம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியால் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்ட பரிந்துரைகளிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பரிந்துரைகளை ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் செயலாளர் நாயகமும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினர், புதிய அரசமைப்புக்கான நிபுணர் குழுவின் தலைவர் றொமேஸ் டி சில்வா தலைமையிலான நிபுணர் குழுவினரிடம் கையளித்தனர்.

இலங்கையின் தற்போதைய அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள மாகாண சபை முறைமையை முழுமையாக அமுல்படுத்த வேண்டும்.

அதேவேளை, மாகாண சபையை மேலும் வலுப்படுத்தும் ஏற்பாடுபாடுகளும் புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதையே



நிபுணர் குழுவுக்கு வழங்கியுள்ள தமது பரிந்துரையில் ஈ.பி.டி.பி. வலியுறுத்தியுள்ளது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கான அதிகாரங்களைப் பயன்படுத்தும் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டவர்கள் சந்தர்ப்பத்தை பாழாக்கி விட்டனர் என்று குற்றம்சாட்டி வருகின்ற ஈ.பி.டி.பி, மாகாண சபை முறைமையை முழுமையாக அமுல்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து முன்னோக்கி நகர்வதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை அடைந்து கொள்ள முடியும் என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற நிலையில், புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசமைப்பிலும் இந்த விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளது. (எ)

# இலங்கைக்கு எதிராக இந்தியா செயல்படாது என்று நம்புகிறோம்

## வெளிவிவகார அமைச்சர் தினேஷ் சொல்கிறார்



கொழும்பு,பெப்.22

**யுத்தக்குற்றம் இடம்பெற்றது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இந்தியா எம்முடைய நட்புநாடாகும். எமக்கு எதிராக இந்தியா செயல்படாது என்று நம்புகின்றோம் என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.**

ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகும் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கை எவ்வாறான அணுகுமுறையைக் கையாளப் போகின்றது என்பது தொடர்பில் அளித்துள்ள நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

**கேள்வி:** - ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் நிகழப் போவது என்ன?

**பதில்:** - மனித உரிமைகள் பேரவையில் எமது நாடு உள்ளடங்கலாக ஏனைய ஒன்பது நாடுகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. இது மிகவும் கவலையளிக்கும் விடயமாகும். ஏனெனில் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் ஆவணங்களில் பிழைகள் உள்ளன. அதில் பிழையின்றி தகவல்கள் முன்வைக்கப்பட்டால் எந்த நாடும் குற்றச்சாட்டுக்கு உள்ளாகாது என்பதுடன், அந்த நாடுகளின் சுயாதீனத்துவத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படாது.

**கேள்வி:** - ராஜபக்ஷக்களின் ஆட்சிக் காலங்களில் இத்தகைய அச்சுறுத்தல்கள் தொடர்ந்தும் ஏற்படுகின்றன அல்லவா?

**பதில்:** - அது தான் பிரச்னையே. நாம் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவத்தை சுயாதீனத்துவம் கொண்ட சுதந்திர நாடு என்ற வகையிலேயே பெற்றுக்கொண்டுள்ளோம். ஆகவே, இந்த நிறுவனம் பாரபட்சமின்றி செயல்பட வேண்டும். ஏனெனில் தெரிவு செய்யப்பட்ட சில நாடுகளின் மீது மாத்திரம் அழுத்தம் பிரயோகிப்பதற்காக நாம் இதில் அங்கத்தவர்கள் ஆகவில்லை. ஆகவே எமது நாடு தொடர்பில் முன்வைக்கப்பட்டிருக்கும் யோசனைகள் சாதாரணமானவை அல்ல.

**கேள்வி:** - அத்தகைய யோசனைகள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

**பதில்:** - அந்த அறிக்கையை நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை எனவும், நிராகரிப்போம் எனவும் ஏற்கனவே கூறியுள்ளோம்.

**கேள்வி:** - அதனை நிராகரிப்பது மாத்திரம் முறையானதாக இருக்குமா? இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்தும் முன்வைக்கப்படுகின்றனவே?

**பதில்:** - நாம் அதனை நிராகரிப்பதற்கான காரணம் இந்தக் குற்றச்சாட்டு அடிப்படையற்றதாகக் காணப்படுகின்றமையே ஆகும். அத்தகைய அறிக்கைகளையே நாம் நிராகரித்துள்ளோம். ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட 30 நிறுவனங்களும் தொடர்ச்சியாக பணியாற்றியுள்ளோம். அவற்றினால் எமது நாட்டின் மீது எந்த குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படவில்லை. இது வெறுமனே தனித்தரப்பினரால் முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டாகும். புலம்பெயர் தமிழர்களே எம்மீது தொடர்ச்சியாக இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்து வருகின்றனர்.

2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் அவர்களுடைய குற்றச்சாட்டுக்களுக்கு அனுசரணை வழங்குவதாக கைச்சாத்திட்டது. எமது நாட்டுக்கு எதிராகச் செயல்படுவதில் எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்பதே அந்த யோசனையாகும்.

**கேள்வி:** - முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, யுத்தக் குற்றம் தொடர்பில் ஆராய்வதற்கு உடன்பட்டமையாலேயே அந்த யோசனையை ஏற்றுக்கொள்ள நேரிட்டது?

**பதில்:** - நாம் எமது நாட்டினுடைய உண்மையான நிலைப்பாட்டை உலக நாட்டுக்கு கூறினோம். எம்முடைய வீரர்களில் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிர்த்தியாகம் செய்துள்ளனர். அதைக் கவனத்தில் கொள்ளாது இருக்க முடியாது. மேலும் 10 ஆயிரத்துக்கும் அதிகமான இராணுவ வீரர்கள் அங்கவீனமடைந்துள்ளனர்.

புலிகளை தோற்கடித்தமையால் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களால் சுதந்திரமாக வாழக்கூடியநிலைமை ஏற்பட்டுள்ளது.

**கேள்வி:** - ஆணைக்குழு அமைக்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆயினும் இதுவரையில் ஆணைக்குழு அமைக்கப்படவில்லையே?

**பதில்:** - இலங்கையின் அரசமைப்பின் படி செயல்பட மாத்திரமே ஜனாதிபதிக்கோ, அரசாங்கத்துக்கோ முடியும். வெளிநாடுகளுக்கு ஏற்றவகையில் செயல்படுவதற்கு எமது சட்டத்தில் இடமில்லை. நாம் தேசிய ரீதியில் நீதிமன்றத்தையோ அல்லது விஷேட ஆணைக்குழுவையோ நியமிப்போம் என உடன்பட்டோம்.

**கேள்வி:** - அவ்வாறு உடன்படுவதனுள் யுத்தக்குற்றம் இடம்பெற்றுள்ளது என்ற குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளப்படும் வகையில் அமைந்துள்ளதல்லவா?

**பதில்:** - இல்லை. யுத்தக்குற்றம் இடம்பெறவில்லை என நாம் கூறியுள்ளோம். காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் இதுவரையில் வழக்கு எதுவும் இல்லை. இலங்கையில் எவராயினும் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளது என்று நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும். அதற்கு, தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற பேதம் இல்லை. அதுவே நடைமுறை, அவ்வாறு இல்லையெனில் பொலிஸாருக்கு எதிராக வழங்கப்படும் முறைப்பாட்டுக்கு அமைய வழக்குத் தாக்கல் செய்ய முடியும். சிலர் அவ்வாறு வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். புலிகளிடமிருந்து தப்பித்து வந்த மூன்று இலட்சம் மக்களில் எவரும் எமது இராணுவத்தினரின் கைகளால் கொல்லப்படவில்லை. இராணுவத்தினரே சிறுவர்கள் மற்றும் முதியவர்களை நீர்நிலைகளுக்கூடாக சுமந்து வந்தனர்.

ஆகவே, இராணுவத்தினர் மீது இத்தகைய குற்றச்சாட்டை முன்வைப்பதாயின் அதற்கான சாட்சியாளர்கள் இருக்க வேண்டும். இலங்கை அடிப்படை கொள்கையிலேயே இருக்கின்றது. அத்துடன், அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகிய உறுப்பினர்கள் ஒரே வீட்டிலேயே இருந்தனர் என்பதை அறிவோம். புலிகள் அவர்களைக் கொன்றனர். தமிழ் அரசியல் வாதிகளை நாமே காப்பாற்றினோம். இன்று தமிழ் அரசியல் வாதிகளின் பாதுகாப்பின் கீழ் பேரணி இடம்பெறுகின்றது. பல வருடங்களுக்குப் பின்னர் கதிர்காமரை கொன்றது யார்? என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வேண்டிய அளவு கதைத்துள்ளோம். ஏனெனில் இதுதொடர்பில் பேசுவது என்றால் புதிதாக ஆணைக்குழுவொன்று நியமிக்க வேண்டும்.

**கேள்வி:** - எப்போது ஆணைக்குழு அமைக்கப்படும்?

**பதில்:** - தற்போது ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் ஊடகங்களின் வாயிலாக அது அறிவிக்கப்படும். பரணகம ஆணைக்குழு என்பது மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிகாலத்தில் நியமிக்கப்பட்ட முக்கியமான ஆணைக்குழுவாகும். அவர் வடக்குக்கு சென்று ஆராய்ந்து அறிக்கையை சமர்ப்பித்தார். அந்த அறிக்கையின் பிரகாரம் சிலர் தமது உறவுகளுக்காக நட்டஈட்டை கோருவதற்கு ஒப்புக்கொண்டுள்ளனர். காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழு செயல்படுகின்றது. அதற்கு உரிய ஆதரவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொடர்ச்சியாக வழங்கி வருகின்றார். வடக்கு - கிழக்கில் மிதிவெடி அகற்றும் பணிகள் இடம் பெற்று வருகின்றன. 11 ஆயிரத்திற்கும் அதிகமான புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வழிக்கப்பட்டு உள்ளனர். இவ்வாறாக நாம் பல நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளோம். இவை தொடர்பில் மனிதவுரிமைகள் பேரவை ஏற்றுக்கொள்ளும் என நான் நினைக்கவில்லை.

**கேள்வி:** - ஏன் நீங்கள் அவ்வாறு கூறுகின்றீர்கள் ?

**பதில்:** - அவர்கள் நாம் பிழையானவர்கள் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர். ஆனால், நாம் எமது நாட்டினுடைய உண்மையான நிலைப்பாட்டை கூறுகின்றோம்.

கேள்வி: - இந்தியாவின் நிலைப்பாடு என்ன?

**பதில்:** - இந்தியா எம்முடைய நட்புநாடாகும். எமக்கு எதிராக இந்தியா செயல்படாது என நாம் நம்புகின்றோம் எனத் தெரிவித்தார். (எ)

# உடல் அடக்கம், தகனம் இரண்டுக்கும் அனுமதி

## சர்வதேச மன்னிப்புச்சபையால் சன்ன ஜயசுமணவுக்கு கடிதம்

கொழும்பு,பெப்.22

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்தல் மற்றும் தகனம் செய்தல் ஆகிய இரண்டுக்கும் அனுமதி வழங்குமாறு வலியுறுத்தி பதில் சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமணவுக்கு சர்வதேச மன்னிப்புச்சபை கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைவாழ் முஸ்லிம் சமூகத்தினரின் உரிமைகளுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதி குறித்து நீங்கள் கவனம் செலுத்தவேண்டும். கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்கள் மற்றும் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவர்களின் உடல்களைக் கட்டாயமாகத் தகனம் செய்யவேண்டும் என அரசாங்கத்தால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள கொள்கை எமக்குப் பெரிதும் விசனமளிக்கிறது.

ஆனால், கடந்த 2020 ஆம் ஆண்டு சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டல்களில் சடலங்களை அடக்கம் செய்தல் மற்றும் தகனம் செய்தல் ஆகிய இரண்டுக்கும் அனுமதியளிக்கப்பட்டிருந்தது. அதுமாத்திரமன்றி உலக சுகாதார ஸ்தாபனமும் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட விஷேட நிபுணர்குழுவும் அடக்கம் செய்வதற்கும் தகனம் செய்வதற்கும் அனுமதியளித்துள்ளது.

இஸ்லாமிய மத நம்பிக்கைகளின் பிரகாரம், ஒருவர் உயிரிழந்த பின்னர் அவருக்கு வழங்கப்படும் இறுதி மரியாதையே அடக்கம் செய்வதாகும். எனினும், முஸ்லிம்களின் மத நம்பிக்கைக்கு முரணான வகையில் அமுல்படுத்தப்பட்டுள்ள கட்டாயத்தகனம் என்ற கொள்கைக்கு இதுவரையில் அரசாங்கம் நியாயமான காரணங்கள் எதனையும் முன்வைக்கவில்லை. தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களை அடக்கம் செய்வதன் விளைவாக நிலத்தடி நீரின் மூலம் வைரஸ் பரவலாம் என்று தொற்று நோய் மருத்துவ நிபுணர் சுகத் சமரவீர தெரிவித்துள்ளார் என்றும் வலியுறுத்துகின்றோம் என அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தமிழ் அரசுக் கட்சிக்குள் எந்த அணியும் இல்லை

## ஊடகங்கள் மீது சீ.வீ.கே. சீற்றம்

யாழ்ப்பாணம்,பெப்.22

சுமந்திரன் அணி, மாவை அணி என்று தமிழ் அரசுக் கட்சிக்குள் எந்த அணியும் இல்லை. எமது கட்சிக்குள் பல அணிகள் உள்ளன என்று மற்றவர்கள் கூறுவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவருமான சீ.வீ.கே. சிவஞானம் காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று ஒன்றிணைந்த அனைத்துக் கட்சிகளின் கூட்டம் இடம்பெற்றது. இதன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, ஒன்றிணைந்த அனைத்துக் கட்சிக் கூட்டங்களில் சுமந்திரன் சார்ந்த அணியினர் கலந்துகொள்வதில்லை எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சுமந்திரன் அணி, மாவை அணி என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்குள் அணிகள் இல்லை. ஊடகங்கள் தான் அவ்வாறு அணிகள் உள்ளன எனத் தெரிவிக்கின்றன. ஆனால், எமது கட்சிக்குள் எந்தவித அணியும் இல்லை எனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார். (எ)

ஈழநாடு
Eelanadu

## கொரோனா தொற்றிலிருந்து மேலும் 843 பேர் குணமடைவு

கொழும்பு,பெப்.22

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மேலும் 843 பேர் குணமடைந்தனர் என தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தோரின் எண்ணிக்கை 74 ஆயிரத்து 299 ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் தொற்று உறுதியான 4 ஆயிரத்து 746 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாட்டில் நேற்றுவரை 79 ஆயிரத்து 480 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# பிளவுபடாத நாட்டுக்குள் அர்த்தமுள்ள தீர்வு செயன்முறைக்கு முழுமையான ஒத்துழைப்பு

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,பெப்.22

நாட்டின் தேசிய பிரச்னைக்கான தீர்வைப் பொருத்தவரையில், பிளவுபடாத நாட்டுக்குள் அர்த்தமுள்ள தீர்வொன்றைப் பெறுவதற்கான செயன்முறைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள உத்தேச புதிய அரசமைப்பு உருவாக்கக்குழுவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் தமது யோசனைகளைக் கையளித்தனர்.

இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: புதிய அரசமைப்பு உருவாக்கக்குழுவினருடன் நாம் கலந்துரையாடியதுடன், எமது யோசனைகளை முன்வைத்தோம். சுமார் இரண்டு மணி நேரம் வரை நீடித்த இந்தக் கலந்துரையாடலின் போது நாம் எமது நிலைப்பாடுகளை அவர்களிடம் தெளிவாக எடுத்துரைத்தோம். பிளவுபடாத, பிரிக்கப்பட முடியாத நாட்டுக்குள் தேசிய பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம் என அவர்களிடம் கூறினோம்.

இப்பிரச்னைக்குத் தீர்வு காணும் நோக்கில் கடந்த 30 வருட காலமாக முன்வைக்கப்பட்ட யோசனைகள் மற்றும் அதற்கு பல்வேறு அரசாங்கங்களுடனும் எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இதற்குரிய தீர்வைப் பெறுவதற்கான செயல்பாடுகளை முன்னெடுக்க முடியும் என நாம் கூறினோம். அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் குறிப்பிட்டோம்.

**கேள்வி:** தற்போதைய அரசமைப்பில் இருப்பதை விடவும் விஷேடமான கூறுகள் உங்களின் பரிந்துரைகளில் இருக்கின்றனவா?

**பதில்:** எம்மைப் பொறுத்த வரை, அதிகாரங்களைப் பரவலாக்கும் முறை அர்த்தமுள்ளதாக அமைய வேண்டும். இது தொடர்பில் எமக்கும் சர்வதேச சமூகத்துக்கும், இலங்கை அரசாங்கம்பலமுறைவாக்குறுதியளித்துள்ளது. அதற்கமைய செயல்பட்டால் இதற்கான தீர்வை அடைந்து கொள்ள முடியும் என்பதுடன், நாமனை வரும் ஒரே நாட்டவராக வாழக் கூடிய சுமுகமான சூழ்நிலை உருவாகும்.

**கேள்வி :** காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என ஏற்கனவே நீங்கள் கூறியிருந்தீர்கள். தற்போது முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளில் அவை உள்ளடக்கப்பட்டுள்ளனவா?

**பதில்:** தற்போதுகூட அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தில் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும் இவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஒரு முறையான அர்த்தமுள்ள செயன்முறை வகுக்கப்பட வேண்டும். அதற்குரிய பங்களிப்பை வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றோம்- என்றார். (எ)

விசேட விலையில் மடிக்கணனி



Laptop
14GB Ram
1 TB HDD
Windows 10
HP i3
Free Bag
கைப்பை உள்ளடங்கலாக

St.Antonys Computer
189, K.K.S Road, Jaffna Town, Jaffna.
021 222 4865 / 075 069 8608

# மரண அறிவித்தல்



பிறப்பு : 20. 01. 1954
இறப்பு : 13. 02. 2021

## அமரர்.விஸ்வநாதன் விஸ்வகுமார் (குமார்)

**(தெல்லிப்பழை மகாஜன கல்லூரியின் பழைய மாணவர், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய இந்து இளைஞர் சபை உறுப்பினர்)**

யாழ்.தெல்லிப்பழை கம்பனையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வநாதன் விஸ்வகுமார் (13. 02. 2021) சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் யாழ்.சண்டிலிப்பாய் இந்து கல்லூரி (Raja school) ஸ்தாபகரான காலஞ்சென்ற ஜெகராஜசிங்கம் - செல்வநாயகி, காலஞ்சென்ற இரத்தினம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு பேரனும். காலஞ்சென்ற விஸ்வநாதன் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும். காலஞ்சென்ற கிருஷ்ணசாமி - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், யாழ். ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சற்குணேஸ்வரி (இந்திரா) யின் அன்புக் கணவரும், தரன் (லண்டன்), திலக் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனகராஜன் (ராஜன் - ஆஸ்திரேலியா), விஜயலட்சுமி (ஜெயா- இளவாலை), காலஞ்சென்ற ஜெகராஜலட்சுமி (செல்லா - மல்லாகம்), இரத்தினலட்சுமி (பாப்பா - லண்டன்), ஈஸ்வரகுமார் (ஈசன் - லண்டன்), இரத்தினகுமார் (இரட்ணா - லண்டன்), சத்தியலட்சுமி (சத்தியா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு சகோதரரும், கணேஸ்வரி (கணேஷ் - லண்டன்) யின் உடன்பிறவா சகோதரனும், முருகதாசன் (இளவாலை), காலஞ்சென்றவர்களான அருமைநாயகம் (மல்லாகம்), திலகநாதன் (கொக்குவில்) மற்றும் விமலாதேவி (சந்திரா - ஆஸ்திரேலியா), சகுந்தலாதேவி (ஓட்டுமடம்), சற்குணராணி (அமெரிக்கா), சோமசுந்தரம் (சோமண்ணை - (லண்டன்), காலஞ்சென்றவர்களான இரவீந்திரன் (ரவி -பிரான்ஸ்), சண்முகநாதன் (கனடா), பஞ்சரஞ்சிதம் (ரஞ்சி - லண்டன்) மற்றும் சுகந்தி (லண்டன்), கலாவல்லி (கலா-லண்டன்), பாலகுமார் (லண்டன்) ஆகி யோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை (ஓட்டுமடம்), குணசேகரம் (அமெரிக்கா), நாகேஷ்வரி (இலங்கை), சிறீதேவி (கனடா) ஆகியோரின் அன்பு சகலனும். செந்தூரன் கண்ணா (அவுஸ்திரேலியா), வீணா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சிறியதந்தையும், மயூராஜ் (ராஜ் - லண்டன்), நிரூபா (கனடா), கோகுலன் (கோபி), ராகுலன் (ரகு -பிரான்ஸ்), சுகிர்த்தா (சுகி - பிரான்ஸ்), கவிதா (லண்டன்) ஆகியோரின் தாய்மாமனும்,

லத்தீஷ் (லண்டன்), பகிரதன்(பகி) தனுஷன், அர்த்தணா, ஜெசிக்கா (லண்டன்), ஆகியோரின் பெரிய தந்தையும், வாணி (அவுஸ்திரேலியா), அலி (லண்டன்), ரமேஷ், சுரேஷ், டினேஷ் (கொக்குவில்), நிந்துஜா (இத்தாலி), நிருபா, நிரூஷா, நிரூஷன் (கனடா), பிருந்தா, லகஷ்சன் (லண்டன்)ஆகியோரின் அன்பு மாமாவும்,

ஓதிரை (பிரான்ஸ்), அபர்ணா (அபி - லண்டன்), சுபிதாசன் (சுபி - பிரான்ஸ்), ஆகியோரின் பெரியப்பாவும், சபேசன் (கனடா), சிவரோகினி (திருகோணமலை), காலஞ்சென்ற சற்குணராஜா (ராஜா), விஜிதா (பரந்தன்), ஜெயா (ஓட்டுமடம்), சசிகலா (ஜேர்மனி), உஷா, நிஷா (கனடா), பானு (அமெரிக்கா), நந்தபாலன் (பிரான்ஸ்), மணிவண்ணன் (கெருடாவில்) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும்.

ராங்கா (குணா - திருகோணமலை), ரமேஸ்வரன்(பரந்தன்), ஸ்டாலின்போல் (கண்ணன் - ஓட்டுமடம்), லக்ஸ்மன் (ராஜ்) (ஜேர்மனி), றொணேஷ், சிறி (கனடா), ஐங்கரன் (அமெரிக்கா), மேகலை (பிரான்ஸ்), சோபிகா (கொடிகாமம்) ஆகியோரின் அன்பு மாமாவும்,

ஶ்ரீஹரி (லண்டன்), யதுர்விவேகா, யதுர்விவேகன் (கனடா), இனயா, ஸ்ஷணா (பிரான்ஸ்) மாயா (லண்டன்) நிலு, நிரோ (திருகோணமலை), லிதுர்சன், குவேதினி (பரந்தன்) நிக்ஷனா (கனடா), நிலேஸ், வார்சா, சயாந்தன், சயாணா (கனடா), காருண்யா (ஜேர்மனி), அஜெய் (அமெரிக்கா), அக்ஷன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் - Divinity Funeral Care, 209 Kenton Road, HA3 OHD Wednesday 24th February 2021: 12.00 to 14.30. and Cremation: Address: Hendon Cemetery & Crematorium, Holders Hill Road, London, NW7 1NB என்னும் இடத்தில் Wednesday 24th February 2021: 16.00 இடம்பெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
**இந்திரா** *(மனைவி - லண்டன் )* - **07977601060**
**தரன்** *(மகன் - லண்டன்)* - **07894342779**
**திலக்** *(மகன் - லண்டன்)* - **07522404871**
**ராஜன்** *(சகோதரன் - ஆஸ்திரேலியா)* - **0061414446250**
**ஜெயா முருகதாசன்** *(சகோதரி -இளவாலை)* - **0777755036**
**சோமண்ணை** *(மைத்துனர் - லண்டன்)* - **07424510991**
**ஈசன்** *(சகோதரன் - லண்டன் )* - **07734733100**
**இரட்ணா** *(சகோதரன் - லண்டன்)* - **07830444155**
**சத்தியா** *(சகோதரி - பிரான்ஸ்)* - **00 33664348073**
**ஜெயா** *(பெறாமகள் - ஓட்டுமடம்)* **0768078776**
**உஷா** *(பெறாமகள் - கனடா)* - **0014167496220**

**தகவல் : குடும்பத்தினர்.**

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக. சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் : திருமதி கோகிலா மகேந்திரன்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா-வாராந்த சினிமா தகவல்கள்

**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி
வீதி விபத்துகளுக்கு பெரிதும் காரணம் சட்டத்தின் இறுக்கமின்மையா? மக்களின் கவனயீனமா?




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி : நலந்தானா-சிறு நீரக சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் பா.பாலகோபி கலந்து சிறப்பிக்கின்றார்



10.00 மணி : யாவரும் கேளீர்

DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)

**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே ( நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்ரஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

கல்வி TV CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.30 மணி : சைவசமயம்

ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு பட்டையார் அம்மன் திருக்கோவில் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு பட்டையார் அம்மன் திருக்கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
08.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு பட்டையார் அம்மன் திருக்கோவில் திருவிழா

CHANNEL HOLY MARY

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : நசரேத்துார்மரியா திரைப்படம்
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.02.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.